# நகுலன்
# NAGULAN

இதழ் 07



## யா/கீரிமலை நகுலேஸ்வர ம. வி.
## காங்கேசன்துறை
## 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலன்

யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்
காங்கேசன்துறை

**2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : "நகுலன்"

வெளியீடு : யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி - 01-07-2018

காப்பாளர் : திரு. த. தயானந்தன் (அதிபர்)

இதழாசிரியர் : திருமதி ஜெ. மரியானந்தராசா

மலர்க்குழு : திருமதி. யா. சத்தியசீலன் (உபஅதிபர்)
திருமதி நா. புனிததயாபரன்
திருமதி சு. கௌரிகாந்தன்
திரு. சி. கௌரிதரன்
திருமதி இ. வசந்தகுமாரி
திரு. செ. கமலக்கண்ணன்
திருமதி றோ. றங்கநாதன்
திரு. உ. கோகுலன்
திரு. இ. திருச்செல்வம்

தாள் : 70 கிராம், வெள்ளை

அளவு : 148 x 210 mm

பிரதிகள் : 150

எழுத்தளவு : 12 புள்ளிகள்

பக்கங்கள் : vi + 64

அச்சுக்கோவை : விக்னேஸ் பிறிண்டேர்ஸ்,
சுன்னாகம்.

அனுசரணை : திரு. உ. பரராஜசேகரன் (பிரான்ஸ்)
(பழைய மாணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம் :

ஓதியுணர்ந்தொழுக

## எமது தொலைநோக்கு :

சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு முகங் கொடுக்கக்கூடிய திறமையும் ஆளுமையுமுடைய மாணவரை உருவாக்குதல்.

## Our Vision

Creating students with the ability and Personality to face National and International changes.

## எமது செயல்நோக்கு :

பொறுப்பேற்கப்பட்ட மாணவரை நவீன உலகில் ஏற்பட்டுவரும் அறிவியல், சமூக பண்பாட்டு, ஆன்மீக மாற்றங்களுக்கேற்பத் தயார் செய்தலை உறுதிசெய்தல்.

## Our Mission

Ensuring the Preparation of students taken charge according to the scientific, social, cultural and spiritual changes of the World.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி

ஈழமணித்திருநாட்டின் பிரசித்தி பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்திற்கு அருகில் நகுலேஸ்வரப் பெருமானின் அருளாசியோடு மிளிர்ந்து கொண் டிருக்கும் பாடசாலை நகுலேஸ்வர மகா வித்தியாலயமாகும். இப்பாடசாலை கருகம்பனையூர் வள்ளல் சு. கனகசபை வழங்கிய காணியில் நிறுவுநர் வள்ளல் வை. கந்தையாவால் ஓலைக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இப்பாட சாலைக்கு கட்டடம் அமைத்து அரச பாடசாலையாகத் தரமுயர்த்துவதற்கு யானும் ஒருவராக நின்று இந்துபோட் இராசரத்தினத்தின் உதவியுடன் அரச பாடசாலையாக்கப்பட்டது.

இப்பாடசாலை இன்று மகாவித்தியாலயமாகத் தரமுயர்ந்து வைரவிழாக் கண்டு பவளவிழாக் காண வீறுநடை போடுகின்றது. இப்பாடசாலை நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து இயங்கி இன்று சொந்த இடத்தில் இயங்குகின்றது. இடம்பெயர்ந்த காலத்தில் இப்பாடசாலையை மூடி அழியவிடாது பாதுகாத்த அதிபர்கள், ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

2014ஆம் ஆண்டில் இருந்து இப்பாடசாலையின் அதிப ராகக் கடமையாற்றும் திரு. த. தயானந்தன் இப்பாடசாலையை மேலும் வளப்படுத்திக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அவர் இப்பாடசாலையில் கடமை ஏற்கும்போது நகுலேஸ்வரப் பெருமானை வணங்கி என்னிடம் ஆசி வேண்டி கடமையைப் பொறுப்பேற்றார். இப்பாடசாலையில் நடைபெறும் வைபவங் களின் போது நகுலேஸ்வரப் பெருமானை வணங்கி என்னிடம் ஆசி பெற்றுச் செல்வார். இவர் நகுலேஸ்வரப் பெருமானின் இறை யருளோடு கல்வியிலும் விளையாட்டிலும் மாணவர் ஒழுக்கத்திலும், பௌதிக வளத்திலும் இப்பாடசாலையை வளப்படுத்தி மெருகேற்றிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பாடசாலை கல்வியிலும், விளையாட்டிலும் பல சாதனைகளைப் படைத்து ஒழுக்கமுள்ள இறைபக்தியுள்ள நல்ல மாணவர்களை சமுதாயத்திற்கு உருவாக்க வேண்டுமென்று நகுலாம்பிகாதேவிசமேத நகுலேஸ்வரப் பெருமானைப் பிரார்த் தித்து ஆசி வழங்குகின்றேன்.

இங்ஙனம்
**இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகர்த்தா
நகுலேஸ்வரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

மாதா, பிதா, குரு, தெய்வம், தமையன் ஆகியோர் ஐங்குரவர் எனப் போற்றப்படுகின்றனர். குழந்தையின் ஆளுமையை மேம்படுத்து வதில் பெரும்பங்கு வகிப்பவர் குரு. குருகுலக்கல்வி, திண்ணைப் பள்ளி, பாடசாலை என அன்றுதொட்டு இன்றுவரை குருவிடம் கல்வி கற்று உலகம் வாழ்கிறது. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது பொன்மொழி. உலகில் வாழும் குழந்தைகளின் இருளை நீக்கி ஒளி கொடுப்பவன் ஆசிரியன் என்றால் மிகையாகாது. அந்த வகையில் அதிபரையும் ஆசிரியர்களையும் முதற்கண் வாழ்த்து கின்றேன்.

தெய்வீக அருள்பெற்ற பூமி கீரிமலை. நினைவை ஒழிப்பதற்கு நீரில் மூழ்கி வினை களைவர் இந்துக்கள். இப்பூமியில் சிறப்புற இயங்கி வரும் நகுலேஸ்வர மகாவித்தியாலயம் ஆண்டு தோறும் "நகுலன்" எனும் சஞ்சிகையை வெளியிட்டு வருகிறது. இம்முறை ஏழாவது மலரை வெளியிடுவது மகிழ்ச்சியே.

பாடசாலை வரலாறுகள், பாடசாலை மாணவர்கள் பெற்றுக் கொண்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டன. பண்ணிசை 1ஆம் இடம், சிங்கள விநாடிவினா குடும்பமட்டம் 2ஆம் இடம், செயற்பட்டு மகிழ்வோம் குடும்பமட்டம் 1ஆம் இடம், கோட்டம் 1ஆம் இடம், வலயம் 3ஆம் இடம், உதைபந்தாட்டம் மாவட்டம், மாகாணம் என வளர்வது கண்டு பூரிப்படைகின்றேன். போட்டிகள், கலை, கட்டுரை, கவிதைகளைத் தாங்கி வளரும் நகுலன் சஞ்சிகையை மனதார வாழ்த்துகின்றேன்.

வாழ்க! வளர்க!

**திரு. மா. ஆனந்தகுமார்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
தெல்லிப்பழைக் கோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து

யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தினால் "நகுலன்" சஞ்சிகையானது இவ்வருடமும் வெளியிடப்படுவதில் பெருமகிழ் வடைகிறோம்.

மாணவச் செல்வங்களது அறிவாற்றல், திறமைகளை வெளிக் கொணரும் வகையிலும் எமது ஆசிரியர்களது திறமைகளையும் எடுத்தியம்பும் விதமாகவும் இச்சஞ்சிகை வெளிவருவது குறிப் பிடத்தக்கது.

அந்த வகையில் புதுவிதமான அழகோடும், ஆக்கபூர்வமான தாகவும் வெளிவரவேண்டும் என்பதில் தனது மேலான ஆலோ சனையையும் வழிகாட்டலையும் வழங்கிய எமது மதிப்பார்ந்த அதிபர் த. தயானந்தன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

இன்னும் தமது ஆக்கங்களைத் தந்துதவிய ஏனைய ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய பெரியார் களுக்கும், வாழ்த்துச் செய்தி வழங்கியவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சேற்றித் தந்த விக்னேஸ் பிறிண்டேர்ஸ் நிறுவனத் தினருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

**திருமதி J.M. ஆனந்தராஜா**
ஆசிரியர் (தமிழ்)
யா/ கீரிமலை நகுலேஸ்வர ம.வி
காங்கேசன்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களை முதற்கண் பணிந்து போற்றுகின்றேன். அவையில் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் இனிய காலை வணக்கம் உரித்தாகுக. இந்நன்னாளில் வருடாந்தச் செயற்பாட்டறிக்கையினைச் சமர்ப்பித்து உரையாற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இன்று, தன்னை நாடிவந்த சிறார்களுக்கு அறிவொடு ஒழுக்கமும் அன்பொடு பண்பும் ஊட்டி வளர்க்கும் வித்தியாலய அன்னை, நிறுவுநர், மற்றும் நிலம் ஈந்த வள்ளல் ஆகியோரை எண்ணி அகமகிழ்ந்து நன்மலர் தூவி வணக்கம் செலுத்தி நன்றிப் பெருக்கை நயம்பட உரைக்கும் பொன்னான நன்னாள் இதுவாகும். இந்நாளில் நல்லாசி வழங்கி அமர்ந்திருக்கும் வண. ந. உமாபதீஸ்வரக்குருக்கள் அவர்களே, எமது இனிய அழைப்பை ஏற்று முதன்மை விருந்தினராகக் கலந்து விழாவை முதன்மைப்படுத்திக் கொண்டிருக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந. காண்டீபன் அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் கால்நடை உத்தியோகத்தர் திருமதி சுதர்ஷா கிங்ஸ்ரன் அவர்களே, நினைவுப் பேருரையாற்ற வருகை தந்திருக்கும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் திரு. த. மோகன்ராஜ் அவர்களே, நிறுவுனர் தம் புதல்வர்களே, வித்தியாலய வளாகத்தினை வழங்கிய வள்ளல் தம் புதல்வர்களே, எமது பாடசாலையின் முன்னைநாள் அதிபர்களே, ஆசிரியர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, பாடசாலையின் உப அதிபர்களே, ஆசிரியர்களே, அன்புக்குரிய மாணவச் செல்வங்களே, பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பெற்றோர்களே, கல்விசாரா ஊழியர்களே தங்கள் அனைவருக்கும் இனிய வணக்கத்தைத் தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்.

ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் கீரிமலை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு வண. ந. உமாபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் நல்லாசி, எப்பொழுதும் எமது பாடசாலை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல என்றும் துணை நிற்கிறது. அவர் எமது பாடசாலையின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ந. காண்டீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கல்வி அபிவிருத்திக்காகப் பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருகின்றார். இவர் காட்சிக்கு எளியவர். பழகுவதற்கு இனியவர். எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையோடு வளங் களைப் பெற்றுத் தருவதிலும், ஆலோசனைகளை வழங்குவதிலும் தனித்துவம் மிக்க பண்பாளர். அத்தகையவரின் கரங்களினால் இன்று பரிசுபெறும் மாணவர்கள் பாக்கியம் பெற்றவர்கள். அவர் இவ்விழாவில் கலந்து சிறப்பிப்பதை பாடசாலைச் சமூகம் பெரும் பேறாகவே கருதுகின்றது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கின்ற கால்நடை உத்தியோகத்தர் திருமதி சுதர்ஷா கிங்ஸ்ரன் அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவி. இவர் எமது பாடசாலையைப் பெருமைப்படுத்தும் வகையில் அரச சேவையில் உன்னத பணியாற்றி வருகின்றார். அவரின் வருகை எம்மாணவர்களுக்கு இன்று நல்லதோர் அனுபவத்தைப் பெறுவதற்கு வழிகோலும் என்பதில் எண்ணளவும் ஐயமில்லை. இவர் மென்மேலும் தனது சேவையில் உயர் பதவிகளை அடைய பாடசாலை சார்பாக வாழ்த்துகின்றேன்.

நினைவுப் பேருரையாற்ற வருகை தந்திருக்கும் திரு. த. மோகன்ராஜ் அவர்கள் எமது பாடசாலையில் ஆசிரியராக, உப அதிபராகப் பணியாற்றியவர். அவர் இன்று நினைவுப் பேருரையாற்று கின்ற பேறுகண்டு வித்தியாலய அன்னை இறும்பூது எய்தி நிற்கின்றாள். அவரின் நினைவுப் பேருரையால் இன்றைய மாணவர் சமூகத்தின் செவிகளுக்கு நல்லதொரு விருந்து கிடைக்கப் பெறுவதையிட்டு அகமகிழ்கின்றேன்.

எமது பாடசாலையின் மகுடவாக்கியம் "ஓதியுணர்ந்தொழுகுக" என்பதாகும். இவ்வாக்கியத்திற்கமைய கசடறக் கல், கற்றவாறு ஒழுகுக என அனுதினமும் ஊட்டும் அன்னை மடியில் தவழுகின்ற மழலைகளாகிய மாணவச் செல்வங்களின் வாழ்வு வளமாக அமைய சிறந்த கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளோடு பல்வேறு இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக உழைக்கின்ற ஆசிரியர்கள் அனைவரையும் இவ்விடத்தில் நன்றியோடு பாராட்டிக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆசிரியர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் தொகை**

| | ஆண் | பெண் | மொத் |
|---|---|---|---|
| தரம் 1 - 5 வரையான மாணவர்களின் எண்ணிக்கை | 52 | 57 | 109 |
| தரம் 6 - 11 வரையான மாணவர்களின் எண்ணிக்கை | 75 | 69 | 144 |
| | | | 253 |

**ஆசிரியர் தொகை**

| | | |
|---|---|---|
| முதுகலைமாணி | - | 02 |
| கலைமாணி | - | 03 |
| வணிகமாணி | - | 01 |
| விஞ்ஞானமாணி | - | 03 |
| நுண்கலைமாணி | - | 03 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | - | 09 |
| பகுதிநேர ஆங்கில ஆசிரியர் | - | 01 |
| அலுவலகப் பணியாளர் | - | 01 |
| காவலாளி | - | 01 |

**பாடசாலை முகாமைத்துவக் குழு**

| | |
|---|---|
| திரு. த. தயானந்தன் | (அதிபர்) |
| திருமதி யா. சத்தியசீலன் | (உப அதிபர்) |
| திரு. சி. கௌரிதரன் | (பகுதித் தலைவர் - ஆரம்பப் பிரிவு, ஆலோசனையும் வழி காட்டலும்) |
| திருமதி வ. இராமச்சந்திரன் | (தரம் 9,10,11 பகுதித் தலைவர்) |
| திருமதி சு. கௌரிகாந்தன் | (தரம் 6,7,8 பகுதித்தலைவர்) |
| திரு. நா. புனிததயாபரன் | (விளையாட்டுத்துறை இணைப்பாளர்) |
| திரு. செ. கமலக்கண்ணன் | (ஒழுக்காற்றுக்குழு) |
| திரு. இ. திருச்செல்வம் | (ஒழுக்காற்றுக்குழு) |
| திரு. றோ. றங்கநாதன் | (ஆலோசனையும் வழிகாட்டலும்) |
| திரு. உ. கோகுலன் | (விளையாட்டுத்துறைத் தலைவர்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்மோடு புதிதாக இணைந்தவர்கள்**

திரு. நா. புனிததயாபரன் - (கணிதம்)

திரு. இ. திருச்செல்வம் - (சித்திரம்)

**ஆசிரியர் கழகம்**

இக்கழகமானது ஆசிரியரின் நலன் பேணுவதோடு, பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்ற கழகமாகத் திகழ்கின்றது. கழக அங்கத்தவர்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்குகொண்டு நல்லுறவை பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அபிவிருத்திச் சங்கமும் அபிவிருத்திச் சபையும்**

எமது பாடசாலையின் வளர்ச்சியில் இரு தூண்களாக இவ்விரு அமைப்புக்களும் துணை நிற்பதுடன் பாடசாலையின் சகல செயற் பாடுகளிலும் விசேட நிகழ்வுகளிலும் பல்வேறு உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி உறுதுணையாகச் செயற்பட்டு வருகின்றன.

**பழைய மாணவர் சங்கம்**

இச் சங்கமானது பாடசாலையின் தேவைகள் அறிந்து பல்வேறு பங்களிப்பினை வழங்கி வருகின்றது. புலம்பெயர் நாடுகளில் வாழுகின்ற எமது பழைய மாணவர்களின் ஒத்துழைப்போடும் பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி முதலான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**இல்ல மெய்வல்லுநர் போட்டி**

இவ்வருடமும் மிகவும் சிறந்த முறையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்வில் எமது பாடசாலையின் பழைய மாணவன் வைத்திய நிபுணர் பொன். கேதீஸ்வரன் அவர்கள் முதன்மை விருந்தினராகவும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சிறப்பு விருந்தினராகவும், கிராம உத்தியோகத்தர் (J/24) கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், கோட்டமட்டப் போட்டிகளில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திக்குழு



Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டமட்டத்தில் 100m ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற செல்வன் கஜநாதன் வலயமட்டப் போட்டியில் பங்கு பற்றியமை குறிப் பிடத்தக்கது.

**தமிழ்மொழித்தினம்**

2018ஆம் ஆண்டிற்கான பாடசாலை மட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் கோட்டமட்டப் போட்டியில் பங்குபற்றினர்.

செல்வி அ. பிரியா கோட்ட மட்டத்தில் கட்டுரை வரைதல் போட்டியில் (பிரிவு IIஇல்) 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

**நூலகம்**

மாணவர்களின் பாட அறிவை மேம்படுத்துவதற்கும், வாசிப்பு மற்றும் அறிவை மேம்படுத்துவதற்குமாக 266 நூல்களே உள்ளன. எனவே நூல்கள் இன்னும் கொள்வனவு செய்யப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்துடன் தளபாட வசதிகளும் பற்றாக் குறையாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொதுப் பரீட்சை பெறுபேற்றுப் பகுப்பாய்வு

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

| ஆண்டு | விண்ணப் பித்தோர் | தோற்றியோர் | 70 புள்ளிக்கு மேல் | சித்தி வீதம் | 100 புள்ளிக்கு மேல் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2012 | 13 | 12 | 04 | 33.33% | 03 | 25% |
| 2013 | 15 | 15 | 06 | 40.00% | 02 | 13.33% |
| 2014 | 17 | 15 | 06 | 56.25% | 03 | 18.75% |
| 2015 | 19 | 18 | 11 | 61.11% | 05 | 27.8% |
| 2016 | 23 | 21 | 16 | 76.2% | 11 | 52.4% |
| 2017 | 23 | 20 | 07 | 35% | 03 | 15% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த (சா/த)ப் பரீட்சைப் பெறுபேறு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 75% | 86.6% | 80% | 75% | 100% | 71.4 |
| றோ. கத்தோலிக்கம் | --- | --- | --- | --- | 100% | ---- |
| கிறிஸ்தவம் | --- | --- | --- | 100% | 100% | 100% |
| மொழியும் இலக்கியமும் | 50% | 46.6% | 45% | 76.5% | 77% | 73.3% |
| ஆங்கிலம் | 12.5% | --- | --- | --- | 15.4% | 6.6% |
| விஞ்ஞானம் | 25% | 26.6% | 27% | 17.65% | 61.5% | 13.3% |
| கணிதம் | 25% | 20% | 9% | 18% | 31% | 13.3% |
| வரலாறு | 25% | 20% | 27% | 23.53% | 69% | 33.3% |
| சித்திரம் | 20% | 50% | 16.66% | --- | 100% | 100% |
| சங்கீதம் | 100% | 62.5% | 100% | 50% | 100% | 100% |
| நடனம் | --- | --- | 100% | 100% | 100% | 100% |
| மனைப்பொருளியல் | 52% | 40% | 57% | 37.5% | 83.3% | 55.5% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | --- | --- | ---- | --- | --- | 100% |
| விவசாயம் | 100% | --- | 25% | 33.3% | 8.6% | 100% |
| குடியுரிமை | 50% | 46.6% | 27% | 70.6% | 46.15% | 53.3% |

## க.பொ.த (சா/த) பரீட்சையில் உயர் பெறுபேறு பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 2013 | சி. நிருஷா | - | 4A, B, 2C,S |
| 2014 | அ. ஜான்சிகா | - | A, B, 4C, 2S |
| 2015 | ஜெ. டிபினியா | - | 3A,2B, 3C |
| 2016 | ச. கபில்தாஸ் | - | 3A,3B,C,2S |
| 2017 | சு. நிலுஜா | - | 4C, 4S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பிரிவு மாணவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றங்கள்

## சுகாதாரக் கழகம்

பொறுப்பாசிரியர் - திருமதி யா. சத்தியசீலன்
தலைவர் - சு. துலக்சன்
செயலாளர் - ஜெ. டிலக்சிகா

இக்கழகத்தின் பொறுப்பாசிரியராக திருமதி யா. சத்தியசீலன் செயற்பட்டு வருகின்றார். இக்கழகத்தினால் பாடசாலைத் தவணைத் தொடக்கத்தில் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் ஒன்றிணைந்து பாடசாலையின் சுற்றாடல் முழுவதும் சிரமதானம் மூலம் தூய்மையாக்கப்பட்டதுடன் வாரந்தோறும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் நடைபெறுகின்றது. மேலும் சுகாதார வைத்திய பணி மனையினால் வழங்கப்படும் போசாக்கு மாத்திரைகள் நேர்த்தியான முறையில் வழங்கப்படுகின்றன.

## சுற்றாடல் முன்னோடிகள் கழகம்

இக்கழகத்தின் பொறுப்பாசிரியராக திருமதி வ. இராமச்சந்திரன் செயற்பட்டு வருகின்றார். இக்கழகமானது 72 மாணவர்களைக் கொண்டதாகவும், 3 குழுக்களாகவும் செயற்பட்டு வருகின்றது. இக் குழுக்களின் தலைவர்களாக செல்வன் ஜெ. டிலான்சன், செல்வி வி. பிருத்திகா, செல்வன் ம. பிரவீன் ஆகியோர் செயற்பட்டு வரு கின்றனர்.

முதலாவது குழுவில் 26 மாணவர்கள் சுற்றாடல் முன்னோடிகள் பதக்கத்தையும் 15 மாணவர்கள் பச்சை வர்ணப் பதக்கத்தையும் பெற்றுள்ளதோடு தம்மை வெள்ளி வர்ணப் பதக்கத்துக்கு தயார்ப் படுத்தி வருகின்றனர். இரண்டாவது குழுவில் 20 மாணவர்களும், மூன்றாவது குழுவில் 26 மாணவர்களும் சுற்றாடல் முன்னோடிகள் பதக்கத்தைப் பெற்றதோடு தம்மை பச்சை வர்ணப் பதக்கத்துக்கு தயார்ப்படுத்தி வருகின்றனர்.

மேலும் இக்கழக மாணவர்கள் பாடசாலைச் சுற்றாடல் சுத்தம் பேணல், சிரமதானப் பணிகள், மரக்கன்றுகள் நடுதல், பராமரித்தல் என்பவற்றில் ஈடுபடுவதோடு அருகிலுள்ள நகுலேஸ்வர ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவ காலங்களில் சிரமதானப் பணிகள் மற்றும் தொண்டர் சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இக்கழகத்தால் சுற்றாடல் தொடர்பான விசேட தினங்களில் விழிப்புணர்வு தொடர் பான செயற்பாடுகளும் இடம்பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

## பாடசாலை மாணவர் பாராளுமன்றம்

எமது பாடசாலையின் மாணவர் பாராளுமன்றத் தேர்தல் சென்ற வருடம் (2017)இல் சிறப்பாக நடைபெற்று பின்வரும் கட்டமைப்பைக் கொண்டு இயங்கி வருகின்றது.

| | |
|---|---|
| செயலாளர் நாயகம் | - திரு. த. தயானந்தன் (அதிபர்) |
| பிரதிச் செயலாளர் நாயகம் | - நிர்வாகம் திருமதி வ. இராமச்சந்திரன் |
| ஒழுக்கம் | - திரு ந. புனிததயாபரன் |
| அபிவிருத்தி | - திருமதி சி. மகேந்திரன் |
| சபாநாயகர் | - செல்வன் ஜெ. டிலான்சன் |
| பிரதமர் | - செல்வி இ. மதனா |
| சபை முதல்வர் | - செல்வன் ச. துலக்சன் |
| பிரதிச் சபாநாயகர் | - செல்வன் வி. ஜெனிஸ்ரன் |
| பிரதிச் செயற்குழுத் தலைவர் | - செல்வி இ. மதினா |
| அமைச்சர்கள் | - 10 பேர் |
| பிரதி அமைச்சர்கள் | - 10 பேர் |
| ஆலோசனைக்குழுக்கள் | - 10 பேர் |

கொண்டதாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கணித விஞ்ஞான மன்றம்

கணித விஞ்ஞான மன்றம் மூலம் தாவரங்களுக்கு விஞ்ஞானப் பெயரிடல் நடைபெற்றது. மாணவர்களை கணித விஞ்ஞானப் போட்டிகளுக்குத் தயார்ப்படுத்தல், கண்காட்சிகளுக்கு அழைத்துச் செல்லல், நேரடி அனுபவங்களைப் பெற களச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுத்து நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ முதல்வர்களுடன் அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்குப் பொறுப்பாசிரியராக யா. சத்தியசீலன் கடமையாற்றுகின்றார்.

## வழிகாட்டலும் ஆலோசனையும்

எமது பாடசாலையின் வழிகாட்டலும் ஆலோசனையும் பொறுப்பாசிரியர்களாக திருமதி றோஜினி, திரு. சி. கௌரிதரன் ஆகியோர் செயற்படுகின்றனர். 2017 - 2018 காலப்பகுதியில் 10 மாணவர்களுக்கும், இரு ஆசிரியர்களுக்கும் ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. காலைக் கூட்டம், வெள்ளிக்கிழமை கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகளில் பல்வேறு தலைப்புக்களில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் நற்சிந்தனை மற்றும் சம்பவங்கள் விபரித்துக் கூறப்படுகின்றன.

## இந்துமாமன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ஜெ. டிலான்சன் |
| செயலாளர் | - | நே. லோஜினி |
| பொருளாளர் | - | இ. மதனா |

**இந்துமாமன்ற ஆலோசனைக்குழு :**

த. தயானந்தன், சி. கௌரிதரன், செ. கமலக்கண்ணன்,
உ. கோகுலன், ற. ரோஜினி, வ. இராமச்சந்திரன்

- இந்துமாமன்றச் செயற்பாடுகள் அதிபரின் வழிகாட்டல் மூலம் தைப்பொங்கல் விழா பாடசாலையில் சிறப்பாக நடத்தியுள்ளோம். அதற்கான நிதியுதவியினை ஆசிரியர் கழகம் வருடந்தோறும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
- நாயன்மார்கள் குருபூசை விழாவை ஆலோசனைக்குழு ஆசிரியர் திரு. சி. கௌரிதரன் ஆசிரியரால் சைவப் பெரியார்களை அழைத்து சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.
- ஆடி அமாவாசையை முன்னிட்டு சிவபூமி மடத்தில் சிரமதானப் பணியும், அன்னதானப் பணியும் செய்வது சிறப்புக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வருடந்தோறும் நகுலேஸ்வரர் ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தில் எமது மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கலை நிகழ்வுகளை வழங்கியும், அன்னதானத்திற்கான பொருட்களை வழங்கியும் வருகின்றனர்.
- நவராத்திரி காலத்தில் பூசகரை வரவழைத்து விசேடமாகப் பூசை நடைபெற்று 10ஆம் நாள் வன்னி வாழைவெட்டு நிகழ்வும், ஏடு தொடக்குதல் நிகழ்வும் அதிபரால் செயற்படுத்தப்பட்டு வருவது சிறப்புக்குரிய நிகழ்வாகவும், ஏடு தொடக்குதல் மூலம் கிடைக்கப்பெறும் தட்சணைகளை வருடந்தோறும் இந்துமாமன்ற வளர்ச்சிக்கு தந்துதவுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.
- நவராத்திரி விழாவின்போது மாணவர்களுக்கு கோலம் போடல், தோரணம் கட்டுதல், மாலை கட்டுதல், சகலகலாவல்லி மனனப் போட்டி போன்றவற்றை இந்துமாமன்ற ஆலோசனைக் குழுவின் உதவியுடன் நடத்தி மாணவர்களுக்கு விழுமியப் பண்பு, மனனத் திறனை வளர்த்தல், கலாசாரப் பண்பாட்டைப் பின்பற்றச் செய்தல், ஆன்மீக உணர்வை வளர்த்து மாணவரை நன்னெறிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இவ்வருட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

எமது பாடசாலையானது ஒவ்வொரு வருடமும் பல்வேறு நிலைகளிலும் அபிவிருத்தி கண்டு வருகிறது. இதற்கு எமது பாடசாலையின் பழைய மாணவர்களின் பங்களிப்பே மூலவேராக அமைகின்றது. அந்த வகையில் எமது பாடசாலையின் 20 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்டப் பெண்கள் அணி வலய மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்று, மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றி நான்காம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளது. இதற்காக உழைத்த மாணவிகள், பயிற்றுநர் மற்றும் பொறுப்பாசிரியர், பெற்றோர்களை நன்றியோடு பாராட்டுகின்றேன். உதைபந்தாட்ட வளர்ச்சிக்காக பின்வரும் பழைய மாணவர்கள் காற்பந்தாட்ட வீரர்களுக்கான பாதணிகள், காலுறைகள் கொள்வனவு செய்வதற்கும், போக்குவரத்து மற்றும் வீரர்களுக்கான ஊட்டச்சத்து வழங்குவதற்குமென நிதிப் பங்களிப்பினை நல்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திரு. ம. ஜெயக்குமார் (கணக்காளர், மடு கல்வி வலயம்)

| | |
|---|---|
| பாதணிக் கொள்வனவு | 30000.00 |

2. திரு. சி. பாலகிருஷ்ணன்

| | |
|---|---|
| காலுறை மற்றும் ஊட்டச்சத்து | 50000.00 |

3. திரு. எஸ். அமிர்தலிங்கம்

| | |
|---|---|
| போக்குவரத்துச் செலலவு | 10000.00 |

4. செல்வி சி. சிவமலர் (ஆசிரியை)

| | |
|---|---|
| போட்டிச் செலவு | 5000.00 |

5. திருமதி இ. அனுசாவதி (பிரதேச சபை உறுப்பினர்)

| | |
|---|---|
| போட்டிச் செலவு | 5000.00 |

6. திரு. கு. ராஜ்குமார்

| | |
|---|---|
| பயிற்சிப் பந்துகள் | 25000.00 |

உதைபந்தாட்ட அணிக்கான சீருடைகளை ரூபாய் 31000.00இற்கு எமது பாடசாலை இசை ஆசிரியை திருமதி றோ. றங்கநாதன் அவர்கள் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார்.

பௌதிக வள அபிவிருத்தி என்ற வகையில் இவ்வருடம் பின்வரும் பழைய மாணவர்களின் பங்களிப்புடன் பின்வரும் செயற்றிட்டங்கள் செம்மையுடன் நிறைவாக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் நுழைவாயிலிலிருந்து இருபுறமும் 590 அடி நீளமான மதில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பங்களிப்புச் செய்தோர் விபரம் வருமாறு.

| | |
|---|---|
| திரு. உ. பரராஜசேகரன் | 539300.00 |
| திரு. தயாபரன் (நலன்விரும்பி) | 800000.00 |
| டாக்டர் பொன். கேதீஸ்வரன் | 75000.00 |
| திரு. த. திருநாவுக்கரசு | 25000.00 |
| திரு. எஸ். ராதாகிருஷ்ணன் | 25000.00 |
| திரு. எஸ். பவனீதன் | 25000.00 |
| மொத்தம் | 1489300.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. த. திருநாவுக்கரசு (பழைய மாணவன்) அவர்கள் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான வாகனத் தரிப்பிடத்தினையும், அதிபர் அலுவலக முகப்புப் படியினையும் சிறந்த முறையில் ரூபாய் 140060.00 செலவில் அமைத்துத் தந்துள்ளார்.

செரண்டிப் சிறுவர் இல்லத்தினால் விளையாட்டு முற்றம் ரூபாய் 107000.00 செலவில் புனரமைக்கப்பட்டு ஆரம்பப் பிரிவு மாணவர் களின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டுள்ளது.

Jaffna Midtown ரோட்டரக்ட் கழகத்தின் அனுசரணையோடு கொழும்பு மற்றும் வடமாகாணத்திலுள்ள கழக உறுப்பினர்கள் இணைந்து எமது பாடசாலையின் இரு கட்டடங்களுக்கும் வர்ணம் பூசி அழகுபடுத்தியுள்ளனர். அத்துடன் ரூபாய் 25700.00 பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

மாணவர் நலனோம்புச் செயற்றிட்டத்தில் யாழ் எயிட் ஊடாக எமது பாடசாலை மாணவர் மூவருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பயிற்சிக் கையேடுகள், குறிப்புப் புத்தகங்கள் மற்றும் எழுதுகருவிகள் உட்பட ரூபாய் 54367.00க்கு லயன். மகேந்திரன் தம்பதிகளினால் வழங்கி மாணவர்கள் ஊக்கு விக்கப்பட்டுள்ளனர்.

காலை உணவு அருந்தாமல் வருகின்ற மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கென ரூபாய் 10000.00இனை எமது பழைய மாணவர் உ. ரவீந்திரன் அவர்கள் வழங்கியுள்ளார்.

விவசாய உபகரணங்கள் வைப்பதற்கென அறை ஒன்றினை அமைப்பதற்காக திரு. நா. இரத்தினம் (பழைய மாணவர்) அவர்கள் ரூபாய் 20000.00 வழங்கியுள்ளார்.

ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் செயற்றிட்டத்தினை 3 வருடங்களுக்கு முன்னெடுத்துச் செல்வதற்காக திரு. உ. பரராஜசேகரன், வைத்திய நிபுணர் பொன். கேதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய பழைய மாணவர்கள் ஆசிரியர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 6000.00 வீதம் வழங்கி வருகின்றனர்.

இத்தகைய அறப்பணிகளுக்கு மனமுவந்து நிதிப் பங்களிப்பினை நல்கிய எமது பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் யாவர்க்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

## விநயமான வேண்டுகோள்

எமது பாடசாலையில் ஆரம்பப் பிரிவிற்கென மூடிய வகுப்பறைகள் எதுவுமின்றி நூலகம் மற்றும் தற்காலிக கொட்டகைகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எனவே 5 வகுப்பறைகளைக் கொண்ட 100 x 20 இருமாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு கடந்த வருடப் பரிசளிப்பு விழாவிலும் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டும் இதுவரை கைகூடவில்லை.

நூலகத்திற்கான தளபாடங்களும், நூல்களும் புதிய மண்டபத்திற்கான மேடையமைப்பும் ஒன்றுகூடல் மண்டபத்திற்கான ஆசனங்கள் 200உம் பௌதிக வளத் தேவைகளாக முன்வைக்கப் பட்டுள்ளன. இவற்றை நாம் பெற்று மாணவர் பயனுறச் செய்ய அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## நன்றி நவிலல்

நிறுவுநர் தினமும் பரிசுத்தினமும், சஞ்சிகை வெளியீடும் ஒருசேர நடைபெற தோன்றாத் துணையாய் நின்ற இறைவனுக்கு முதற்கண் நன்றியைச் செலுத்துகின்றேன். இந்நாளில் ஆசியுரை வழங்கிய குருக்கள் ஐயா அவர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றி.

எமது அன்பான அழைப்பை மறுக்காது பிரதம விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. காண்டீபன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த பழைய மாணவி, கால்நடை உத்தியோகத்தர் திருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதர்ஷா கிங்ஸ்ரன் அவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

நினைவுப் பேருரையாற்றிய ஆசிரியர் திரு. த. மோகன்ராஜ் அவர்களுக்கும், நகுலன் சஞ்சிகை வெளியீட்டுக்கான நிதிச் செலவினை வருடந்தோறும் வழங்கி வருகின்ற திரு. உ. பரராஜ சேகரன் அவர்களுக்கும், நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் சிறக்க நிதிப் பங்களிப்பினை நல்கிய பழைய மாணவர்கள், ஞாபகார்த்தப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்த அன்புள்ளங் களுக்கும் நன்றி தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

விழா சிறக்க உழைத்த உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர் கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பழைய மாணவ சங்கத்தினர், பெற்றோர்கள், அலுவலக உதவியாளர்கள் அனை வருக்கும் நன்றி உரித்தாகுக.

அலுவலக மற்றும் பாடவிதானங்களுக்குத் தேவையான கணனி வேலைகளைச் சிறப்பாகச் செய்து தருகின்ற செல்வி சி. தனுசியா அவர்களுக்கும், அவருக்கான வேதனத்தை எதுவித எதிர்பார்ப்பு மின்றி அளித்து வரும் யாழ் எயிட் நிறுவனப் பணிப்பாளர் அவர் களுக்கும் சிறப்பான நன்றி.

நன்றி

**அதிபர்**

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்ட அணி - மாகாண மட்டம் 4ஆம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த காலத்தில் நிறைந்த சேவை நகுலேஸ்வராவுக்கு நல்கிய ஆசிரியர்கள்

திரு. கா. சரவணமுத்து அவர்கள் பாடசாலை ஆரம்பக்கால ஆசிரியர். பாடசாலை பதிவுபெறாத காலத்தில் எவ்வித வேதனத்தையும் எதிர்பாராது பதவியேற்ற சேவை மனப்பாங்குடைய சுறுசுறுப்புடைய ஆசிரியர். எடுத்த கருமத்தை எவ்வித இடையூறு ஏற்பட்டாலும் எதிர்த்து நின்று முடிக்கும் வல்லாளன். யாருக்கு என்றாலும் உற்ற இடத்து உதவும் மனப்பாங்காளன். நகுலேஸ்வராவைப் பொறுத்தளவில் அவரது செயலாற்றல் சொற்களால் வர்ணிக்க முடியாது.

எவ்வித வசதியுமற்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு நீர்வசதியின்மை பெருங்குறையாக இருந்தமையால் பக்கத்தில் உள்ள வளவில் இருந்து நீர் எடுத்து மாணவர் தாகம் தீர்ப்பது மட்டுமன்றி, நிழல் மரங்கள் நாட்டி நீரூற்ற வேண்டிய தேவையும் ஏற்பட்டபோது அதிபருடன் ஆசிரியரும் சேர்ந்தே அவ்வேலையை பூர்த்தி செய்ததுடன் பாடசாலை சம்பந்தமான ஏனைய விடயங்களிலும் அதிபருக்கு உதவியாகத் தோளோடு தோள் கொடுத்து பாடசாலை முன்னேற்றத்திற்கு உதவிய ஆசிரியராவார். நாட்டு நிலைமை சீராக இருந்திருந்தால் அவர்கள் நாட்டிய மரங்களே அவரின் முயற்சியை பறைசாற்றுவனவாக அமைந்திருக்கும்.

வகுப்புக்கள் கூடியும், ஆசிரியர்கள் குறைந்தும் இருந்த காலத்தில் 2, 3 வகுப்புக்களுக்கு ஒரே நேரத்தில் படிப்பிக்க வேண்டிய தேவையை பூர்த்தி செய்ததுடன் ஒரு மாணவன் 2, 3 நாட்கள் பாடசாலைக்கு வருகை தராவிட்டால் அம்மாணவனின் பெற்றாரை அணுகி காரணம் அறிந்து அவர்களை வருகை தரச்செய்வதில் உற்சாகமாகத் தொழிற்பட்டவராவார்.

ஐந்தாம் வகுப்புக்குட்பட்ட பாடசாலையாக இயங்கிய காலத்தில் மாணவன் ஒருவன் யாழ் மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றி சிறந்த இடத்தைப் பெற்றானேயானால் அஃது ஆசிரியரின் முயற்சியே யாகும். போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு அந்தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளில் பயிற்சி பெற்றவர்களைக் கூட்டி வந்து மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கத் தவறியவர் அல்லர்.

ஆங்கில S.S.Cயுடன் படிப்பித்த ஆசிரியர் அவர்கள் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பயிற்சி முடிந்ததும் வேறு பாடசாலையில் கடமையேற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வேறு பாடசாலையில் கடமையாற்றினாலும் நகுலேஸ்வராவில் நடைபெறும் எந்த நிகழ்விலும் பரிசளிப்பு விழா என்றாலும் சரி, மெய்வல்லுநர் போட்டியென்றாலும் சரி ஆசிரியர்களில் ஒருவராக நின்று தொழிற்படத் தவறியதில்லை.

நான் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் சில ஆலோசனை களைத் தரத் தவறியதில்லை. அன்றைய பாடசாலைக் காலம் இன்றைய காலம் போலல்லாது பொருளாதார வசதி குறைந்த காலம். "மில்க்வைற்" மூலம் பாடசாலைக்கு உதவி கிடைத்ததும், வசதிக் கட்டணமூலம் செலுத்தப்பட்ட மின்சாரக் கட்டணம் கல்வித் திணைக்களம் மூலம் செலுத்தப்பட்டமையும் அவர் தந்த ஆலோசனைகளேயாகும். அவரின் சேவையை என்றென்றும் நகுலேஸ்வரா மனத்திலிருத்தும்.

செல்வி சிதம்பரலட்சுமி முத்தையா அவர்கள் சைவப் பண்பாடுடையவர். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று சேவையாற்றுவதற்குரியதாக அவரது வாழ்க்கை அமைந்தமையும் இறைவன் அவருக்கு அளித்த வரமேயாகும். "கீழ்ப்படிவு" என்ற சொல்லே அற்றுப்போன காலத்தில் அச்சொல்லுக்கு அர்த்தம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருந்த ஆசிரியையாவார்.

பேருந்து தரிப்பிடமாக விளங்கிய பிரசித்திபெற்ற கீரிமலைக்கு போர்ச்சூழல் காரணமாக பேருந்துகள் வருவது குறையவே வெளியிடங்களிருந்தும் வருகை தந்த ஆசிரியர்கள் சொந்த இடங்களுக்கு மாற்றம் பெறவேண்டிய நிலை நிகழ்ந்ததும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக நகுலேஸ்வராவின் கல்விநிலை பாதிப் படையத் தொடங்கியது. அந்நேரத்தில்தான் கீரிமலையை வசிப் பிடமாகக் கொண்ட செல்வி முத்தையா அவர்கள் மகாஜனா விலிருந்து தனது போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் பெற்று வந்தார். கல்வியை நன்முறையில் மாணவர்க்குப் போதித்தது மாத்திரமன்றி அதிபர், ஆசிரியர்களுடன் அன்புடனும், பண்புடனும் பழகி அனைவரது அன்பையும் மதிப்பையும் பெற்றவர்.

நகுலேஸ்வராவில் "குருளையர்" என்ற சாரணரை உருவாக்கி அவர்களை அவர்களுக்குரிய பயிற்சிப் பட்டறைகளுக்கு அழைத்துச் சென்று பயிற்சிகள் கொடுத்ததுடன் போட்டிகளிற் பங்குபற்றி சிறந்த இடங்களைப் பெற்று நகுலேஸ்வராவுக்குப் பெருமை சேர்த்தவராவர்.

அவரது செயற்பாட்டையும் தோற்றத்தையும் ஒப்பிடும்போது ஒரு பந்தானது எப்படி உருண்டு உருண்டு செல்லுகின்றதோ அதே போன்று உருண்டு உருண்டு தொழிற்படுவார். உற்றார், உறவினர்க்கும் உதவி ஒத்தாசை வழங்குவதிலும் முன்னின்ற வராதலால் அவரது இழப்பு அவர்களுக்கும் ஓர் பேரிழப்பாகும்.

இத்தருணத்தில் இசை, நடன ஆசிரியர்கள் அற்ற காலத்தில் கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றுவதற்கு மாலை வேளைகளில் வந்து மாணவர்க்கு பயிற்சி கொடுத்துதவிய இசையாசிரியர் செல்வி நாகம்மா கதிர்காமர், நடன ஆசிரியர் திரு. இராஜரட்ணம் அவர்களின் சேவையையும் நகுலேஸ்வரா நினைவுறுத்துகிறது. நடன ஆசிரியர் பின்பு பகுதிநேர ஆசிரியராகப் பதவி வகிக்கும் வாய்ப்பு நகுலேஸ் வராவுக்கு கிடைத்தது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பதற்கிணங்க இவர்கள் அனைவரதும் சேவையைப் பாராட்டுவதோடு இவர்களனைவரதும் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றது நகுலேஸ்வரா.

**திருமதி தனபாக்கியம் இராமசாமி**
முன்னாள் அதிபர்

நியூசிலாந்து
15-06-2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கும் ஆசிரியம்

கட்டுக் கோப்பான
சமூக அமைப்பிற்குள் எதற்கும்
விட்டுக் கொடுக்காத
உறவு வலைக்குள்
தட்டிக் கொடுத்த உரிய
தகைமையை தன்னகத்தே
ஒட்டிக் கொண்டிருந்த
யாரோ பலதரப்பட்டவர்களால்
படித்தோம் பழகிக்கொண்டோம்
பழக்கப்படுத்திக் கொண்டோம்
பண்பான பலவற்றை
வழக்கப்படுத்திக் கொண்டு
வாழ்க்கையில் உயர்ந்தோம்.

இன்று
வேதனைகளால் வெந்துருகினாலும்
வெளிவேடம் காட்டிய
வெறும் கூட்டுக்குள் சோதனைகளை
மூட்டை கட்டிவிட்டு
அறிக்கைகளால் சூழப்பட்டு
கற்றுக் கொடுப்பவற்றையும்
கோவைகளாக்கி இலக்கமிட்டோம்
இலக்கங்களுக்குள் எம்தரத்தை
தரப்படுத்திக் கொண்டோம்
கோவையான பல விடயங்களால்
எம்மிலே நாம்
ஆதங்கம் கொண்டோம்
ஆற்றுப்படுத்தல் பலசெய்தும்
ஆற்றமுடியாமல் தேம்புகின்றோம்.
இதயங்களில் எதைச் சுமந்து
இன்னல் பட்டாலும்
இயலுமானவரை கற்பிக்கின்றோம்
எதையும் உணர விரும்பாத விம்பங்களுக்கு....
எல்லாம் எடுத்துரைக்கின்றோம்
சமூக சவால்கள் சுமத்தப்படும்போது
சோர்ந்து போகாது
பண்பாட்டைப் பாடமாக்கி பலவிடயங்களுள்
ஒழுக்கத்தை உயர்வாய்ப் பேண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழுங்கடிக்கப்படாத மனிதத்தை கட்டியெழுப்ப
மனங்கொண்டு பணியாற்றுகின்றோம்
ஆனால்....
படிக்கும் பாடத்தை தூக்கிவீசி
இடித்துரைக்கும் ஒழுக்கத்தை
ஒன்றுமே இல்லையென இலகுவாக்கி
பண்பாட்டை திண்டாடவிட்டு
நவீனத்தை நாகரிகம் என்ற பெயரில் தமதாக்கி
சமூகக் கட்டமைப்புக்கு ஒட்டை அடித்து
ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும்
சமூகத்தை உருவாக்கும் எம்நிலை.....?
விமர்சனங்களுள் விசனப்பட்டுவிடாது
விளம்பரங்களுக்கும் விலைபோகாது
வீணாக உழைப்பதாய் ஒரு உணர்வு.....?
ஓடுகின்றோம் ஒன்றையுமே சாதிக்கமுடியாத
சமூகத்தை உருவாக்கிவிட்டு
மார்பு தட்டிக்கொள்ளுகின்றோம்....... என்பதையும்
வேதனையுடன் உணர்கின்றோம்
ஒழுக்கம் மிக்க சமூகத்தை
கட்டியெழுப்ப முடியாத ஏதிலிகளாய்.....
சிந்தனைகளுள் விலை போன உலகை
விலைகொடுத்து வாங்கிய
வீணர்களாய் விழி பிதுங்குகின்றோம்
பச்சோந்திகளோடும் பரிதாப வாழ்வு
தொடர்ந்தும் வாழுகின்றோம்.....?
தன்னை உணர்ந்து
தகைமைப் படுத்திக்கொள்ளாத மனங்களுக்கு
உழைக்கின்றோம்.....?
மழைக்கு தலைநிமிரும் தளிராய்
தலை நிமிரக் காத்திருக்கும்
சிலருக்காய் வதைக்கப்பட்டாலும்
சிதைக்கப்பட்டாலும் புதைக்கப்பட்டாலும்
புதிதாய் விதைக்கப்படத்தக்க விதைகளை
எதிர்நோக்கி இன்னும் காத்திருக்கின்றோம் - ஏனெனில்
இன்னும் உயர விரும்பும் மனங்களுக்கு
உரம்போட ஊக்கத்தோடு காத்திருக்கும்
பரிதாபத்திற்குரிய பயந்தாங்கொள்ளி
ஆசிரியர் நாம்.

**J.M ஆனந்தராஜா**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஜெயா ரீச்சர்

எனதன்பு ஆசான் இவர் என் வாழ்விற்கு
எல்லாமும் ஆகி நிற்கின்றார்
என்னவென்று நான் உரைப்பேன் இவர் புகழ்
என் வாழ்விற்கு ஒளிதந்த அருளினை

ஒளியாய் என் எதிர்காலம் ஜொலிக்க
ஏறு ஏறு என ஏற்றியே விட்டவள்
ஏற்றிடும் என் புகழ் தனையெல்லாம் - தான்
ஏற்றிடும் மகிழ்ச்சி தனைக் கொண்டவள்

ஆசான் பற்றி எடுத்துரைக்க மொழியேது? - நானும்
ஆசானாகிட எனை உயர்த்த பாடுபட்டிங்கே
ஆறறிவையும் அற்புதமாய் புகட்டியதால்
ஆகிவிட்டீர் எனக்கொரு ஒளி தீபமாய்

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள் என
அரவணைப்பதில் பெற்றவளை மிஞ்சியவள்
அகிலத்தில் யாரைப் போற்றுவாய் எனக் கேட்டால்
அறுதியாய் சொல்வேன் என் ஜெயா ரீச்சரை

நன்றிமறப்பது நன்றன்றதனை நன்றாக
நானுணர்ந்து கொள்ளும் வேளைதனிலே
நன்மைகள் தனையே எனக்களித்த ஜெயா ரீச்சருக்கு
நானடிமை அன்பிலே என்றும் நானுரைப்பேன்.

**இ. திருச்செல்வம்**
ஆசிரியர்
யா/கீரிமலை நகுலேஸ்வர
மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Chronic Kidney Disease (CKD)

திருமதி யாழினி சத்தியசீலன்

மனிதனில் ஒரு சோடி சிறுநீரகங்கள் வயிற்றுக் குழியினுள் முள்ளந்தண்டென்புக் கோவையின் இரு பக்கங்களிலும் முதுகுப் புறமாக அமைந்திருக்கின்றது. வளர்ந்த மனிதனொருவனின் சிறு நீரகத்தின் நீளம் ஏறத்தாழ 13cm ஆகவும் அகலம் ஏறத்தாழ 6cm ஆகவும் இருக்கும். அத்துடன் அவரைவித்து வடிவுடையதாகவும் இருக்கும்.

சிறுநீரகத்தில் ஏற்படும் நோய்களில் பொதுவாக சிறுநீரகக் கல் உருவாதல், சிறுநீரக செயலிழப்பு, சிறுநீரக அழற்சி, Chronic Kidney Disease (நாட்பட்ட சிறுநீரக நோய்) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சிறுநீரகத்தின் பிரதான தொழில் நைதரசன் கழிவுகளை வெளி யேற்றல், மேலதிக நீரை வெளியேற்றல், குருதி அமுக்கத்தை கட்டுப் பாட்டிற்குள் வைத்திருத்தல்.

Chronic Kidney Disease இன் போது சிறுநீரகங்கள் செயலிழந்து தமது வழமையான தொழிற்பாடுகளை செய்ய முடியாமல் போய்விடு கின்றன. இதன்போது குருதி அமுக்கம் அதிகரிக்கும். செங்குருதிக் கலங்களின் எண்ணிக்கை குறையும், என்புகள் நலிவடையும், சிறுநீரகத்தின் தோற்றத்தில் மாற்றம் ஏற்படும், முதுகுவலி, களைப்பு, பாதத்தில் வீக்கம் அல்லது கட்டி என்பன தோன்றும்.

சிறுநீரக நோய்களைத் தடுப்பதற்கு ஒவ்வொரு வருடமும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளல், புகைத்தல், மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல், ஒவ்வொரு நாளும் அரை மணித்தியாலம் உடற்பயிற்சி செய்தல், உடற்திணிவுச் சுட்டியை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல். அதாவது எங்களுடைய உயரத்தை Cmஇல் கணித்து அதிலிருந்து 100ஐக் கழிக்க வரும் விடை எங்களுடைய நிறையாக இருக்க வேண்டும். மருத்துவரின் அனுமதியின்றி பின்வரும் மாத்திரைகளை உட்கொள்ளக்கூடாது. (Aspirin, Ibuprofen, Naproxen)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவிலான சுத்தமான நீரை அருந்துதல், (நிறமூட்டிய பானங்கள் அருந்துவதைத் தவிர்த்தல்) தொடர்ச்சியாக ஓர் இடத்தில் இருந்து அதிகநேரம் தொலைக்காட்சி பார்த்தலைத் தவிர்த்தல்.

இலங்கை மக்களை 2012 - 2015 காலப்பகுதியில் அதிகம் தாக்கிய தொற்றாநோய்களில் மரணத்தை ஏற்படுத்திய நோய்களில் பின்வரும் நோய்களைக் குறிப்பிடலாம். Heart Disease, Diabetes and Kidney Disease.

Chronic Kidney Disease இன் தாக்கம் அதிகமாகக் காணப்படும் இடங்களாக நல்லூர், காரைநகர், நெடுந்தீவு, கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார் ஆகிய இடங்கள் காணப்படுகின்றன.

Chronic Kidney Disease 50% 17 - 49 வயதிற்கிடைப்பட்டவர்கள், 32% 50 - 69 வயதிற்கிடைப்பட்டவர்கள், 18% 70 வயதிற்கு மேற் பட்டவர்கள்.

WHO அறிக்கையின்படி Chronic Kidney Disease கூடுதலான தாக்கம் ஏழை விவசாயிகள் 40 - 70 வயதிற்கிடைப்பட்டவர்கள்.

Chronic Kidney Disease 29%மானவர்கள் ஆரம்பக் கட்டத்தில் இனங்காணப்படுகின்றனர். 70%மானவர்கள் இறுதிக் கட்டத்தில் இனங் காணப்படுகின்றனர்.

Kidney Disease இனங்காண்பதற்கு மேற்கொள்ளும் பரி சோதனைகள்.

1. சிறுநீர் பரிசோதனை (வெளியேறும் புரதத்தின் அளவைக் கணித்தல்)
2. குருதிப் பரிசோதனை (Glomerular Filtration Rate)

சிறுநீரக நோயாளிகளுக்கான நுகைப்பு (Dialysis) யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போதனா வைத்தியசாலைகளில் மேற் கொள்ளப்படும். Dialysis போது கழிவுகளை வெளியேற்றல் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக நீரை வெளியேற்றல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

சிறுநீரக மாற்றீடு கொழும்பு போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும்.

**சிறுநீரக நோயாளி தவிர்க்கவேண்டிய உணவுகள்.**

தக்காளி, கீரை, உருளைக்கிழங்கு, சர்க்கரைவள்ளி, வாழைப்பழம், மாம்பழம், தோடம்பழம், உலர்பழங்கள்.

**சிறுநீரக நோயாளிகளுக்கு உகந்த உணவுகள்**

மஞ்சள், பூண்டு, வெங்காயம், கரட், கத்தரிக்காய், முள்ளங்கி, பச்சைப்பட்டாணி, முட்டைக்கோஸ், ஆப்பிள், காலிபிளவர், திராட்சை, எலுமிச்சம்பழம், பேரிக்காய், அன்னாசி, பிளம்ஸ், தார்பூசணி எண்ணெய், நல்லெண்ணெய்.

சிறுநீரக நோய்களைக் குணப்படுத்தும் பாரம்பரிய முறைகளாக சிறுநீரகங்களில் மேல் இஞ்சி ஒத்தடம் கொடுத்தல், புளியை உணவில் அதிகளவில் சேர்த்தல்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பதன் மூலம் சிறுநீரக நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறுவோம். நலமுடன் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Effects of Plastic Bags on Environment

The effects of plastic bags on the environment are really quite devastating. While there are many objections to the banning of plastic bags based solely on their convenience, the damage to the environment needs to be controlled.

There is no way to strictly limit the effects of plastic bags on the environment because there is no disposal method that will really help eliminate the problem. While reusing them is the first step, most people either don't or can't base on store policies. They are not durable enough to stand up to numerous trips to the store so often the best that citizens can do is reuse them when following pooper scooper laws.

The biggest problem with this is that once they have been soiled the end up in the trash, which then ends up in the landfill or burned. Either solution very poor for the environment. Burning emits toxic gases that harm the atmosphere and increase the level of VOC in the air while landfills hold them indefinitely as part of the plastic waste problem throughout the globe.

**Plastic Bag Litter**

Even when citizens try to manage their plastic bag disposal wind plays a role in carrying them away as litter. This litter is not biodegradable and thus where it lands it tends to stay for long period of time. A bag that is eventually ripped to shreds from high winds or other factors doesn't disappear but instead is spread in smaller amounts throughout the area. This can cause more problems as these smaller pieces are carried away through storm drains and often end up in the waterways.

Plastic bag litter is often also the result of human laziness. The plastic bag might make for a good carry on to the beach for the day but once all of the pretzels and chips are consumed an estimated one in three consumers simply allow the bag to disappear into the wind and waves.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With more the 500-billion and possibly as many as a trillion plastic bags in circulation annually this can lead to a catastrophic littering problem. Not only is littering unattractive but is also a very serious environmental hazard.

**The effects of plastic Bags in Waterways**

One of the greatest problems is that an estimated 300 million plastic bags end up in the Atlantic Ocean alone. These bags are very dangerous for sea life, especially those of the mammal variety. Any hunting mammal can easily mistake the size, shape, and texture of the plastic bag for a meal and find its airway is cut off. Needless deaths from plastic bags are increasing every year.

Porpoises are the most common victim. Because they eat sea nettles and jelly fish they are most likely to mistake the plastic bag for food. If they survive the swallowing of the bag, it is unlikely that they are able to continue with normal digestion and thus eventually die a slow and painful death from toxicity or intestinal blockage.

The environmental balance of the waterways is being thrown off by the rate of plastic bag finding their way into the mouths and intestinal tracts of sea mammals. As one species begins to off at an abnormal rate, every other living organism in the waterway is impacted. There are either too many or too few and changes within the environment continue to kill off yet more organisms.

**The Effects of plastic Bags on Land**

The indefinite period of time that it takes for the average plastic bag to breakdown can be literally hundreds of years. Every bag that ends up in the woodlands of the country threatens the natural progression of wildlife. Because the break down rate is so slow the chances that the bag will harmlessly go away are extremely slim. Throughout the world plastic bags are responsible for suffocation deaths of woodland animals as well as inhibiting soil nutrients.

without the balance of the ecosystem food sources dry up and starvation occurs. With an increase in plastic bag use throughout the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

world, the eventual effects could be literally devastating even to the human population.

**Recycling Plastic Bags**

While it's noble thought to place plastic bags in the recycling bin every week, studies have proven that there are very few plants that actually recycle them. Most municipalities either burn them or send them off to the landfill after sorting. This is because it can be expensive to recycle this type of plastic. It doesn't melt down easily and is often not realistically able to be reused from its original form without considerable overhaul to the facility.

The premise of recycling these bags is nice. Yet funding for the upgrades just has not happened and thus less than 1% of all bags sent to recycling plants world wide end up in the recycling project. Most are left to become a pollution problem in one way or another.

**Alternatives to Plastic Bags**

There are always alternative to plastic bags and the search for more alternatives continues. Paper bags are a possible option but they also take their toll on the environment. The use of trees to increase the production of paper products combined with the increased energy that is required to make paper bags will also have a negative environmental effect.

Reusable plastic bags are being introduced to regions that want to outlaw the plastic bag altogether. These are stronger and more durable and can used for three to five trips to the store.

Of course, the reusable cloth bag is fast becoming a favourite among environmental supporters. While thus far no bag is without its issues these are the bags that are currently recommended for use to help protect environmental concerns.

**Mrs. S. Gowrykanthan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலைப் பிரிவு மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவே இராது

வானத்தில் யாரும்
வர்ணம் தீட்ட முடியாது
ஆனால்
வாழ்க்கையில் நீ
தீட்ட நினைக்கும் வர்ணத்தையும்
யாரும்
தடுத்துவிட முடியாது
முயற்சி செய் - உன்
முயற்சிக்கு வெற்றி
கிடைக்கும் என்ற
உறுதியான நம்பிக்கையும்
உன்னைப் படைத்தவனின்
உடனிருப்பும் என்றும்
உன்னுடன் இருக்கும்வரை - உன்
பாதைகளில் தீட்டப்படும்
வர்ணங்களுக்கும்
செதுக்கப்படும் சிற்பங்களுக்கும்
முடிவே இராது
இன்றே இப்போதே முயற்சியை
தொடங்கு முன்னேறு.

**கோ. மதிசுதன்**
தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிகள் அழுவதில்லை

துன்பங்கள்
ஆயிரம்
தொடர்ந்து
வரலாம்
சோகங்கள் பல
துரத்தி துரத்தி
அடிக்கலாம்
எண்ணிலடங்கா
எத்தனையோ
சோதனைகளால்
வேதனைகளால்
வெந்துருகலாம்
ஆனாலும்
சோதிக்கப்படவும்
வாதிக்கப்படவும்
பலவற்றில்
சாதித்துக் காட்டவும்
மற்றவர்களை
வளர்த்தெடுக்கவும் என்று
வடிவம் பெற்று
அவதாரம் எடுத்துவிட்ட
அரசிகள் யாரும்
அழுவதில்லை..... தெரியுமா?

**க. கஸ்தூரி**
தரம் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்

01. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
விடாமுயற்சி பயன் தரும்

02. அலைமோதும் போதே தலை முழுகு.
சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது

03. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
வறுமையிலும் செம்மை

04. உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்.
பொய்ம்மையின் கேடு

05. எருமை வாங்கும் முன் நெய்க்கு விலை பேசாதே.
அளவு கடந்த கற்பனை கூடாது

06. ஐந்து பணத்திற்குக் குதிரையும் வேண்டும் ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.
பேராசை

07. கெடுகுடி சொற்கேளாது.
தீய வழியை விரும்புபவர் நற்புத்தி கேளார்

08. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
இரத்த உறவின் வலிமை

09. பகையாளி பகையை உறவாடிக் கெடு.
பகைவருடன் உறவுகொண்டு பகை போக்குதல் நன்று

10. வேலைக் கள்ளிக்குப் பிள்ளைப் பிராக்கு.
போலி நியாயம்

தொகுப்பு :
**ஜெ. ஜெதுஷா**
தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவுத் தகவல்கள்

01. சாலைச் சந்திப்பில் குறியீடாக பச்சை விளக்கு எரிந்தால் என்ன செய்ய வேண்டும்?
    சாலையைக் கடக்க வேண்டும்

02. காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப் பட்டது?
    சீனா

03. உமியிலிருந்து தயாரிக்கப்படும் பொருள் எது?
    கம்பியூட்டர் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சிலிக்கன்

04. ஆண்டர்சன் கூறிய நான்காவது அறிவுசார் நிலை?
    பயன்படுத்துதல்

05. ஜீன்ஸ்துணி யாரால் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
    லீவைஸ்ட்ராஸ் - 1948

06. காவிரி நதி எந்த மாநிலத்தில் உற்பத்தி ஆகிறது?
    கர்நாடகா

07. ஸ்லாத், கோடியாக் மற்றும் ஹிமாலயன் பிளாக் எந்த விலங்கினத்தைச் சார்ந்தது?
    கரடி

08. பால் ப்தனிடும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
    லூயி பாஸ்டர்

09. ஒரே குடும்பத்தில் நான்குபேர் நோபல் பரிசு பெற்ற குடும்பம்?
    ரேடியத்தைக் கண்டுபிடித்த மேரிகியூரி அம்மையாரின் குடும்பம்

10. ஏவுகணையைக் கண்டு பிடித்தவர் யார்?
    வெர்ணர் வான் பிரவுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. எந்திர பீரங்கியைக் கண்டுபிடித்தவர்?
ஜேம்ஸ் பக்கின்

12. நீர் வாயுக் குண்டைக் கண்டுபிடித்தவர்?
எட்வர்ட் டெய்லர்

13. அணுகுண்டைக் கண்டுபிடித்தவர்?
ஜே. ராபர்ட் ஓபன் ஹெய்மர்

14. துப்பாக்கியை கண்டுபிடித்தவர்?
பி. வான்மாஸர்

15. பாரசூட்டினைக் கண்டுபிடித்தவர்?
ஏ. ஜே. கார்ணரின்

16. இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் கணவர் யார்?
இளவரசர் பிலிப்

17. தேனீக்களில் எத்தனை பிரிவுகள் உள்ளன?
3 (இராணித்தேனீ, ஆண் தேனீ, வேலைக்காரத்தேனீ)

18. தேனீக்கள் தங்கள் கூட்டை எங்கே அமைத்துக் கொள்ளும்?
மலைப்பொந்து

**தி. தரணிகா**
தரம் - 10

# Notice

The Annual Prize day of
Keerimalai Naguleswara will be held on
1st July 2018
at 8.30 a.m
in the Main Hall
All are invited.

**M. Tharsan**
Grade - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வியின் தந்தை

கொடியது எது? என ஔவைப்பிராட்டி கேட்டார். அவரே பதிலையும் கூறினார். "கொடிது கொடிது வறுமை, அதனிலும் கொடிது இளமையில் வறுமை" என விளக்கினார். வறுமையில் வாடி வதங்கியவர்களுக்குத்தான் வறுமையின் உண்மை நிலை புரியும். அதனை நன்கு புரிந்தவர்தான் C.W.W. கன்னங்கரா அவர்கள்.

தான் இளமையில் அனுபவித்த துன்பங்களையும், துயரங் களையும் தனக்குப் பின் வரும் சமூகம் அனுபவிக்கக்கூடாது என்று யார் நினைத்துச் செயற்படுகிறார்களோ அவர்கள்தான் உயர்ந்த மனிதர்கள். இதனைச் செயலில் காட்டியவர்தான் C.W.W. கன்னங்கரா அவர்கள்.

அந்நியர் ஆட்சியின்கீழ் பல இன்னல்களை நமது மக்கள் அனுபவித்தனர். அவர்களது கெடுபிடிக்குள் சிக்கித் தவித்தார்கள். காலி மாவட்டத்தில் பிறந்த கன்னங்கரா அவர்கள் புலமைப் பரிசில் பெற்றுக் கற்றார். வறுமையான குடும்பத்தில் பிறந்த C.W.W. கன்னங்கரா அவர்கள் கல்வி கற்பதில் அதிக ஆர்வமும் திறமையும் மிக்கவர்.

காலி ரிச்மண்ட் கல்லூரியில் புலமைப் பரிசில் மூலம் உயர் கல்வி கற்கும் காலத்தில் அவர் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின்கீழ் தான் அனுபவிக்கும் துன்பங்களைத் தனது சந்ததியினர் அனுபவிக்க விடக்கூடாது என்ற உயர் இலட்சியத்துடன் செயற்பட்டார். தனது கல்வியை முடித்துக் கொண்டார். அவர் 1910இல் ரிச்மண்ட் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் மொறட்டுவவில் உள்ள கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1915ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் சிறையில் அடைக்கப்பட்ட தலைவர்களை மீட்கும் போராட்டத்தில் பங்குகொண்ட கன்னங்கரா அவர்கள் அரசியலில் ஈடுபாடு காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1923இல் சட்டவாக்கக் கழகத்திற்கு உறுப்பினராகத் தெரிவானார். 1930இல் தேசிய காங்கிரஸ் தலைவரானார். அவர் தொடர்ந்து சிங்கள மகாதுமையின் உபதலைவராகவும் பணியாற்றினார்.

1931இல் காலித் தொகுதியில் போட்டியிட்டார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அபேட்சகரை விட இரு மடங்கு வாக்குகள் கூடுதலாகப் பெற்று அரசுக் கழக உறுப்பினராகத் தெரிவானார்.

அரசுக் கழகத்தில் கல்வி அமைச்சர் பதவியை வகித்து இலங்கையருக்கு அளப்பெரும் சேவையாற்றினார்.

1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் 06ஆம் திகதி கன்னங்கரா அவர்களால் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்விச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதால் இலங்கையில் கல்வித்துறை புதிய பரிணாமம் கண்டது. திறமையிருந்தும் பணமில்லாத காரணத்தினால் ஒதுக்கப் பட்டிருந்த கிராமப்புற மாணவர்களும் கல்வி கற்கும் வாய்ப்பு இதனால் கிட்டியது.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியைப் பெறும் வாய்ப்பு இலங்கை மாணவர்களுக்கு கிடைத்தது. மேலும் தேர்தல் தொகுதி தோறும் அன்னார் மத்திய கல்லூரிகளை நிறுவி கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். நாடு பூராகவும் இத்தகைய கல்லூரிகள் கட்டப்பட்டன. புலமைப் பரிசில் பரீட்சையை அறிமுகம் செய்து திறமை வாய்ந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கி அக்கல்லூரிகளில் பயிலும் வாய்ப்பளித்தார்.

இன்று இலவசக் கல்வித் திட்டத்தினால் நமது மக்கள் பெரும் நன்மையடைகிறார்கள். கிராமப்புறத்துச் சிறார்கள் அதன் பயனை அனுபவிக்கிறார்கள்.

கல்வியை புத்தகங்களுக்குள் மாத்திரம் வரையறுத்துவிடாமல் மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குரிய வசதிகளையும் பெற்றுக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசக் கல்வியால் பயனடையும் நாம் அனைவரும் திரு. கன்னங்கரா அவர்களுக்கு நன்றியுடையோராய் இருக்க வேண்டும். அதனால் அவரை இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் நினைவில் கொள்கிறோம். அரசியல் வானில் என்றும் நிலைத்து நிற்கும் தலைவர்களில் கன்னங்கரா போற்றுதற்குரியவர்.

**சி. திஜானுஜா**
தரம் - 10

## கல்வி

சிறகு முளைத்த சிட்டுக் குருவிகளாய்
சிந்தனை கூடமாம் பள்ளிதனில்
வெண்ணிறப் புறாவாக நாம் தினம் தினம்
பெருமையுடன் பயிலும் கல்வி
கற்கும் வேளைதனில்
வேம்பாய் கசத்திடும்
பிற்காலமதில் கரும்பாய் இனித்திடும்
நற்பெயரை என்றும் தேடித்தரும்.

நானிலத்தில் நல்வழி காட்டிவிடும்
கரையிலாக் கல்விதனை - நாமும்
நாளெல்லாம் கற்றிடுவோம்
அனுபவக் கல்வியினால் அனுதினமும்
அறிவை உரமாக்கிடுவோம்.

கற்றவர்கள் போற்றுகின்ற பெருஞ்
செல்வக் கல்விதனை வாழ்வினில்
கண்டறிந்தே கற்க வேண்டும் - என்றும்
மாண்புற வாழ்ந்திடவே.

**"கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்"**

**இ. மதனா**
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவன்

பூமியைச் சுவர்க்கமாக்கும்
புதிய படைப்பாளி உழவன்
சேற்றிலே காலை வைத்து - நமக்கு
சோற்றை அளிப்பவன் உழவன்.

மழையை நம்பி மட்டும்
மண்ணை வளமாக்கும்
மனிதன் இவன் படும்
இன்னல்களை அறிவார் எவருமில்லை.

மாசடையும் சூழலின் கூறுகளால்
மாறிவிட்டது மனிதன் நிலை
மாயும் உடலுடன் வேகும் வெயிலில் அவன்
வியர்வை சிந்தி பட்டபாடெல்லாம் வீணாகிறது.

"அவனுக்காக அல்லாமல்
உனக்காகச் சூழலைக் காப்பாற்று மனிதா"

**ஆக்கம் : ஜெ. டிலான்ஷன்**
தரம் -

# பொது அறிவு

01. இலங்கையின் முதலாவது சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம் எது?
கட்டுநாயக்கா

02. எமது நாட்டில் எல்லா மதத்தவர்களும் போற்றி வழிபடும் மலை எது?
சிவனொளிபாதமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?
பம்பரகந்த

04. உலகில் மிக உயரமான மேட்டுநிலம் எது?
திபெத்

05. இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?
சேர். வில்லியம் கோபல்லாவ

06. உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படும் நாடு?
கியூபா

07. ஏரிகளின் நாடு என அழைக்கப்படுவது?
பின்லாந்து

08. இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்திய ஆண்டு எது?
1945

09. இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

10. வளிமண்டலத்தின் அமுக்கத்தை அளக்கப் பயன்படும் கருவி எது?
பாரமானி

**தொகுப்பு : பா. தாரணி**
தரம் - 10

## உங்களுக்குத் தெரியுமா?

- வருமானத்தில் பணக்கார நாடாகத் திகழ்வது - குவைத்
- வெள்ளை யானைகள் அதிகம் காணப்படும் நாடு - தாய்லாந்து
- பூமியிலிருந்து சூரியனின் தொலைவு - சுமார் 150 மில்லியன் km
- கடலின் ஆழம் சராசரியாக - 4 கிலோமீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தென்கிழக்கு ஆசியாவின் மிகச்சிறிய நாடு - சிங்கப்பூர்
- தேள் இனத்தில் 1300 வகையுண்டு
- பாலைவனத்தில் வளரும் கள்ளிச் செடிகள் 200 வருடங்கள் வரை வாழும்.
- இலங்கைக்குரிய தனித்துவமான கலைப் படைப்புக்களில் ஒன்று சந்திரவட்டக்கல்
- சிறையில் வாடாத கறுப்பு மலர் என அழைக்கப்பட்டவர் நெல்சன் மண்டேலா.
- இன்று உலகினை ஆட்டிப் படைக்கும் கைத்தொழில் வல்லரசு நாடுகள் G7 நாடுகள் எனப்படும்.

**தொகுப்பு : இ. மதனா**
தரம் - 10

## அம்மா

சொல்ல வந்ததை சரியாக சொல்லிவிடாமல்
தவித்து நின்று பார் தாய் மொழியின்
அருமை புரியும்
வெளிநாட்டில் இருந்து பார் தாய்நாட்டின்
அருமை புரியும்
இதைபோல் தாயை விட்டு தள்ளி இருந்துபார்
தாயின் அருமை புரியும்
நோய் வந்தவுடன் பாயை தேடுவதைவிட
தாயை தேடுகிறது என் மனசு

உணவு என்பது மருந்து
உடை என்பது மானம்
பணம் என்பது தேவை
ஆங்கிலம் என்பது மொழி
தமிழ் என்பது உயிர்
அம்மா என்பது பாசம்

**நே. லோஜினி**
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச் சொற்கள்

துறைசார்ந்த பயன்பாடுகளுக்காக புதிய சொற்கள் அவ்வப் போது உருவாக்கப்பட்டு வருகின்றன. அவை கலைச் சொற்கள் எனப்படும்.

01. Computer - கணனி
02. Compact Disk - இறுவட்டு
03. Data - தரவு
04. e-mail - மின்னஞ்சல்
05. Exchange - பரிமாற்றம்
06. Fax - தொலைநகல்
07. Format - வடிவமைப்பு
08. Information - தகவல்
09. Internet - இணையம்
10. Memory - நினைவகம்
11. Media - ஊடகம்
12. Multimedia - பல்லூடகம்
13. Network - வலையமைப்பு
14. Web Page - வலைப்பக்கம்
15. Data Base - தரவுத் தளம்
16. FM - பண்பலை
17. Museum - அருங்காட்சியகம்
18. Digital - எண்மானம்
19. Download - பதிவிறக்கம்
20. Password - கடவுச்சொல்
21. Keyboard - விசைப்பலகை
22. Remote Controller - தொலைக்கட்டுப்படுத்தி

**தே. லக்சிகா**
தரம் - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா

கருவில் என்னை சுமந்த கருணையே
கனவில் மட்டும் எனக்குத் தெரிந்த அப்பாவைவிட
கருவில் சுமந்த நீயே பெரிது
மூன்று எழுத்தில் எனக்குப் பிடித்த கவிதை அம்மா
வானில் தோன்றும் அந்த நிலாவை விட
என் கண்ணில் கண்ட நிலா என் அம்மா
ஆயிரம் உறவுகள் என் அருகில் இருந்தாலும்
அம்மா, உன்னைப் போல வருமா?
கனவில்கூட வரும் தேவதை அம்மா
கண்ணின் மணிபோல உள்ளம் எல்லாம் கவிபாட
கருக்கொடுத்தவளே அம்மா.

**யோ. அஜந்தன்**
தரம் - 9

# மரபுப் பெயர்

தமிழ் மொழியில் வழங்கிவரும் மரபுப் பெயர்களை அறிந்து கொள்வோம்.

**விதைகளைக் குறிக்கும் மரபுப் பெயர்கள்**

- வேம்பு - கொட்டை
- ஆமணக்கு - முத்து
- கடுகு - மணி
- கோதுமை - மணி
- சோளம் - மணி
- நெல் - மணி
- வெண்டி - கொட்டை
- தோசை - கொட்டை
- கத்தரி - விதை
- மிளகாய் - விதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிஞ்சுகளைக் குறிக்கும் மரபுப் பெயர்

- தென்னை - குரும்பை
- பனை - நுங்கு
- பலா - மூசு
- மா - வடு
- வாழை - கச்சல்

### இலைகளைக் குறிக்கும் மரபுப் பெயர்கள்

- தென்னை - ஓலை
- பனை - ஓலை
- பலா - இலை
- தினை - தாள்
- நெல் - தாள்

### வேறு சில மரபுப் பெயர்கள்

- ஆடு மேய்ப்பவன் - இடையன்
- பசுமேய்ப்பவன் - ஆயன்
- குதிரை செலுத்துபவன் - பாகன்
- விமானம் செலுத்துபவன் - வலவன்
- கப்பல் செலுத்துபவன் - மீகாமன், மாலுமி

**தொகுப்பு : வி. ரவிராஜ்**
தரம் - 9

# உளவியல் உண்மைகள்

- அதிகம் சிரிப்பவர்கள் அதிகம் தனிமையில் வாடுபவர்கள்.
- அதிகம் தூங்குபவர்கள் சோகத்தில் உள்ளவர்கள்.
- வேகமாக அதேநேரம் குறைவாகப் பேசுபவர்கள் அதிகமாக இரகசியங்களை வைத்திருப்பவர்கள்.
- அழுகையை அடக்குபவர்கள் மனதால் பலவீனமானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முரட்டுத்தனமாக உண்பவர்கள் மன அழுத்தத்தில் உள்ள வர்கள்.
- சின்னச்சின்ன விடயங்களுக்கும் அழுபவர்கள் அப்பாவிகள். மனதால் மென்மையானவர்கள்.
- சின்னச்சின்ன விடயங்களுக்கும் கோபப்படுபவர்கள் அன்புக் காக ஏங்குபவர்கள்.

**தொகுப்பு : சு. பிரணவி**
தரம் - 9

# தொடர்மொழிக்கு ஒரு மொழி

| | | |
|---|---|---|
| அணிந்துரை | - | ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த ஏனையோர் வழங்கும் புகழுரை. |
| தீர்க்கதரிசி | - | நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவர் |
| அட்டவதானி | - | ஒரேநேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கக் கூடியவர். |
| அல்லங்காடி | - | மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை |
| அகால மரணம் | - | எதிர்பாராத சந்தர்ப்பத்தில் திடீரென ஏற்படும் மரணம். |
| ஏகபோகம் | - | ஒரு முடிப்பொருளை தனித்து அனுபவித்தல். |
| உவமானம் | - | ஒரு பொருளுக்குப் பதிலாகக் கூறும் மற்றப் பொருள். |
| அகதி | - | தனது அனைத்து உடைமைகளையும் இழந்தவன். |
| அன்பளிப்பு | - | அன்பின் அடிப்படையில் ஒருவருக்கு வழங்கப் படுவது. |
| சகாப்தம் | - | நூறு ஆண்டுகளைக் கொண்ட பகுதி |
| தசாப்தம் | - | பத்து ஆண்டுகளைக் கொண்ட பகுதி |
| சிரஞ்சீவி | - | நெடுங்காலம் வாழ்பவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூதனசாலை | - | புராதனப் பொருள்களைச் சேகரித்து வைக்கும் இடம். |
| தாய்நாடு | - | தான் பிறந்த நாடு |
| தற்கொலை | - | தானே தன் உயிரைப் போக்குதல் |
| ஐவகை நிலம் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| இருசுடர் | - | சூரியன், சந்திரன் |
| இரு குரவர் | - | தாய், தந்தை |
| இருபொருள் | - | கல்வி, செல்வம் |

**தொகுப்பு : உ. பிரவின்ராஜ்**
தரம் - 9

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

ஒரு ஏழை விவசாயி ஐந்து மாடுகளை மிகப் பாசமாக வளர்த்து வந்தான். அந்த ஐந்து மாடுகளும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவும் பாசமாகவும் வளர்ந்து வந்தன. ஒருநாள் தோட்டத்தில் அவை மேய்ந்து கொண்டிருந்தன. அச்சமயத்தில் மிகப் பசியுடன் அவ் வழியாக சிங்கம் ஒன்று வந்தது. சிங்கம் மாடுகளைப் பார்த்ததும் அதன் பசியைத் தீர்த்துக்கொள்ள மாடுகளின் அருகே வந்தது. இதைப் பார்த்த மாடுகள் எல்லாமாக சேர்ந்து சிங்கத்தை விரட்டி யடித்தது. தன் பசியைத் தீர்க்க முடியவில்லையே என்று நினைத்துக் கொண்டு தப்பியோடியது சிங்கம். இன்னொரு நாள் அந்த ஐந்து மாடுகளும் சண்டை இட்டு தனித்தனியாக மேய்ந்து கொண்டிருந்தன. இதை அவதானித்த சிங்கம் இதுதான் சரியான சந்தர்ப்பம் என யோசித்து தனித்தனியாக நின்ற மாடுகளை ஒவ்வொன்றாகப் பிடித்து தன் பசியைத் தீர்த்துக் கொண்டது. ஆகவே, கூடி வாழ்வோமாயின் நன்மை உண்டாகும்.

**இ. வாசனாதிலக்சி**
தரம் - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை

அன்னை என்பவள் தெய்வம் - நாம்
அவனியில் அவதரிக்க கருவியானவள்
மூலக்கருதனில் முந்நூறு நாள் சுமந்து
மூச்சு முதல் வழி பொருள் தந்தவள்

அன்னை என் உலகு - பக்குவமாய்
அரவணைத் தென்னை வளர்த்திட்டவள்
பசி நோக்காது பட்டினி கிடக்காது
பாலகனென்னை பக்குவமாய்ப் பார்த்தவள்

நடை பயின்று உடையணிந்து - பள்ளிக்கு
நல்மாணவனாய் நான் செல்ல உதவுவாள்
கல்விதனைக் கற்று நல்ல பிரசையாக - அவள்
கண் துஞ்சாது எனக்கு அறிவூட்டுவாள்

அன்னை இல்லாது நான் இல்லை
அன்னை இல்லாது உலகு இல்லை
அன்னை இல்லாது அன்பு கிடையாது
அன்னை மடிதேடி ஓடுவோம் - அவள்
பாதம் போற்றிப் புகழ்வோம்.

**கி. தஸ்மி**
தரம் - 8

# பனைமரம் எமக்கொரு வரம்

கற்பகதரு என்பது கேட்டதெல்லாம் கொடுக்கும் மரம் ஆகும். தேவலோகத்தில் ஒரு கற்பகதரு போல பூலோகத்தில் உள்ள கற்பகதரு பனையாகும். பனை மரத்தின் அனைத்துப் பாகங்களும் ஏதோ ஒரு வகையில் எமக்குப் பயன்படுகின்றன. பனை மரங்கள் உலர் வலயத்தில் செழிப்பாக வளரும். எமது நாட்டில் பனை மரத்துக்கு புகழ்பெற்ற இடம் யாழ்ப்பாணமாகும். பனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி செய்ய மிகுந்த உழைப்போ, செலவோ தேவைப்படாது. வேலியடைத்துக் காப்பதோ, பசளையிடவோ வேண்டிய தேவை இல்லை. சுமார் நாற்பது சென்ரிமீற்றர் ஆழத்தில் பனம் விதையைப் புதைத்து விட்டால் போதும். அது தானாகவே வளரும்.

பனை நமக்கொரு கொடை
பனையை வளர்ப்போம் பயன் பல பெறுவோம்.

**தி. அபின்சிகா**
தரம் - 9

# சக்தி முதல்களின் முறையான உபயோகம்

- வீட்டின் மின் பாவனையை சிக்கனமாகக் கையாளுதல்.
- குறுகிய தூரப் பயணங்களை நடந்து செல்லல் அல்லது துவிச் சக்கர வண்டியைப் பயன்படுத்தல். (இது சுகாதாரத்துக்கும் நல்லது).
- தனியாள் போக்குவரத்துக்குப் பதிலாகப் பொதுப் போக்குவரத்து முறையை நடைமுறைப்படுத்தல்.
- எரிபொருள் வினைத்திறன் மிக்க (Hybrid) வாகன இயந்திரங் களை அறிமுகப்படுத்தல்.
- மின்னினால் இயங்கும் வாகனங்களைப் பயன்படுத்தல்.
- இயன்றவரை மாற்றுச்சக்தி முதல்களைப் பயன்படுத்தல். உதாரணம் - குளிப்பதற்கு நீரைச் சூடாக்கும் போது சூரியநீர் வெப்பமாக்கியைப் பயன்படுத்தல்.
- வீட்டில் உணவு சமைப்பதற்குத் தேவையான எரிபொருளை அயற் சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளல். உதாரணம் : விறகு, சிரட்டை
- போக்குவரத்து நெருக்கடி கூடிய நேரத்தில் பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளல்.
- பிளாஸ்ரிக் பாவனையை இயன்றளவு குறைத்தல். (பிளாஸ்ரிக் உற்பத்திக்காக எரிபொருள் செலவாகின்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மண்ணிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் எரிபொருள் (சுவட்டு எரிபொருள் பாவனையைக் குறைப்பதன் அவசியம் பற்றி மக்களுக்கு விழிப்பூட்டல்.

**ஜெ. கிசாஜினி**
தரம் - 7

# படித்ததில் பிடித்தது

* உன்னைத் தாழ்த்திப் பேசும் போது ஊமையாய் இரு
உன்னை உயர்த்திப் பேசும் போது செவிடனாய் இரு

* படித்துக் கெட்ட ஆணில்லை
பணிவால் கெட்ட பெண்ணில்லை

* அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள்
சொல்பவரை விட நீங்கள் பயன்பெறக் கூடும்

* அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகின்றது
அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கின்றது
அதிகம் செயற்படுபவனையே கைகூப்பித் தொழுகின்றது

* நீங்கள் வெற்றிக்காகப் போராடும் போது வீண் முயற்சி என்பர்
நீங்கள் வெற்றி பெற்றபின் விடாமுயற்சி என்பார்கள்

* நாளை மழை அறியும் எறும்பாய் இரு
நேற்றைய மழைக்கு குடைபிடிக்கும் காளானாய் இராதே.

* மண்ணில் விழுவது தப்பில்லை ஆனால்
விதையாக விழுந்து மரமாக எழு.

* முடியாது என்று சொல்வது கூட மூடநம்பிக்கை
முடியுமா என்று கேட்பது அவநம்பிக்கை
முடியும் என்று சொல்வதே தன்னம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முட்கள் இல்லாத கடிகாரம் போன்றது. அது நின்றாலும் ஓடினாலும் பயனில்லை.

* மனித மனத்தில் தோன்றும் நல்ல எண்ணங்களே இந்த உலகின் மிகச் சிறந்த வைரங்கள் ஆகும்.

* வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை வீணாக்காதே.

* கஷ்டப்படுபவனிடம் சிரிப்பு இருக்காது
சிரிக்கிறவனிடம் கஷ்டம் இருக்காது
ஆனால் கஷ்டத்திலும் சிரிக்கிறவனிடம் தோல்வி இருக்காது

* ஒழுக்கமே வாழ்வின் அடிப்படைப் பண்பு அது மனித இதயத்தின் தூய்மையில் தான் வேரூன்றி இருக்கின்றது.

* துக்கத்தால் தற்கொலை செய்பவன் தைரியசாலி என்றால் அந்தத் துக்கத்தை தாங்கிக் கொள்பவன் பெரும் வீரன்.

* எதிரியின் கையில் உள்ள ஆயுதத்தைப் பார்த்துக் கேலி செய்வதை விட அதைப் பிடுங்கிக் கொள்வது புத்திசாலித்தனம்.

**அ. பிரியா**
தரம் - 8

# பேசுவோம்

- தாயிடம் அன்பாய்ப் பேசுவோம்
- தந்தையிடம் பண்பாய்ப் பேசுவோம்
- ஆசிரியரிடம் அடக்கமாயப் பேசுவோம்
- துணைவியிடம் உண்மையைப் பேசுவோம்
- சகோதரியிடம் அளவாயப் பேசுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சகோதரனிடம் அளவாய்ப் பேசுவோம்
- குழந்தைகளிடம் ஆர்வத்தோடு பேசுவோம்
- உறவினரிடம் பரிவோடு பேசுவோம்
- நண்பர்களிடம் உரிமையோடு பேசுவோம்
- அதிகாரியிடம் பணிவோடு பேசுவோம்
- வியாபாரியிடம் கராராகப் பேசுவோம்
- வாடிக்கையாளரிடம் நேர்மையாகப் பேசுவோம்
- தொழிலாளரிடம் மனித நேயத்தோடு பேசுவோம்
- இறைவனிடம் மௌனமாகப் பேசுவோம்.

**இ. மதுஷா**
தரம் - 6

# சிலேடை நொடிகள்

01. இலைகள் அசைவது எதனாலே? சுவாசம் செய்வது எதனாலே?
காற்றினால்

02. கீரை நிலத்தில் விதைப்பதேன்? கீழார் செல்வரை நாடுவதேன்?
பிடுங்கித்தின்ன

03. குதிரை வளர்வதெப்படி? செல்வம் அழிவதெப்படி?
கொள்ளையிட்டு

04. கொல்லர் பிழைப்பது எப்படி? குத்தரிசி வேகுவது எப்படி?
உலை வைத்து

05. சுவர் வெளுப்பது எதனால்? வெற்றிலை சிவப்பது எதனால்?
சுண்ணாம்பினால்

06. எருமைக் கன்று அழுவதேன்? எருக்கம் இலை பழுப்பதேன்?
பால் வற்றுவதால்

07. குழந்தை அழுவதேன்? குப்பை தேங்குவது ஏன்?
எடுப்பாரற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. குடிகெட்டுப் போவது ஏன்? பூவை வண்டு நாடுவதேன்?
மதுவால்

09. இரத்தம் பெருகுவது எதனாலே? இரசம் மணப்பது எதனாலே?
பெருங்காயத்தால்

10. பசுவின் பால் கறப்பதெப்படி? பாண்டவர் வந்ததெப்படி?
குந்தியிருந்து

**கெ. யஸ்மினி**
தரம் - 7

# ஒழுக்கம் விழுப்பம் தரும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை, அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்வுக்குச் சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமேயாகும் என்றால் மிகையல்ல. இதனாலேயே ஒல்காப் புகழ்மிகு தொல் காப்பியரும் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்றார்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகின்றன. மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கம். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக் கொள்ள வேண்டும். பல்வேறு திறமை களைக் காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகிறது.

உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழ வேண்டும். மற்றவர்கள் பார்த்துப் பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக் கூடாது. இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமைய வேண்டும். இறந்தும் நாம் வாழவேண்டுமாயின் இருக்கும் போதே மேன்மையான வாழ்வை வாழ வேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாகவே வரும். இதனையே வள்ளுவரும்

"ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை" எனக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளீட்டுவது வாழ்வின் நோக்கமாயினும் அதன் மூலம் புகழீட்டுவதே நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். பொருள் வழியே புகழ் வரவேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக நாம் மதித்துப் போற்ற வேண்டும். ஒழுக்கத்தை உயிர்போற் கருதிக் காப்பாற்ற முனைய வேண்டும். இத்தகையோரையே வள்ளுவர் "ஒழுக்கத்தின் ஒல்கா உரவோர்" என்கிறார்.

ஒழுக்கமுடையோர் நிச்சயம் உயர்வடைவர். "நீ எதை மதிக்கின்றாயோ அது உன்னை மதிக்கும்" என்பது முதுமொழி. ஒழுக்கத்தை உயிராக உயர்வாக மதிப்போருக்கு ஒழுக்கம் உயர்வு தரும் என்பது திண்ணம். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" என்பது வள்ளுவர் வாக்கு. தீயொழுக்கம் என்றும் துன்பத்தையே தரும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஒழுக்கம் இல்லாதோர் தலையின் இழிந்த மயிரனையர் ஆகிவிடுவர். எனவே சமூக அந்தஸ்தைப் பெற மனிதனுக்கு ஒழுக்கம் உயிர் போன்றது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

ஒழுக்கத்தில் உயர்ந்தோர் பலர். இயேசு, புத்தர், காந்தி போன்றோரின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்ப்போமானால் அவர்கள் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பதைக் காணலாம். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும் பயிலா விட்டாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும் என மாணவர்களுக்கு உபதேசித்தார் காந்தியடிகள்.

சுருங்கக் கூறின் ஒழுக்கத்தைப் பேணுவோர் உயர்வர். அல்லாதோர் பழிசெய்து வாழ்வில் பாழ்பட்டழிவர். இந்த உண்மையை எந்நாளும் நினைவிற் கொண்டு வாழ்வோமாயின் நமது வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

"ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்"

**இ. டிலானி**
தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமையும் சிறுவர் துஷ்பிரயோகமும் ஒரு பார்வை.

சர்வதேசத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது என்று அறிந்தவர் களும், அறியாதவர்களும் உள்ளனர். இருந்தாலும் சிறுவர்களுக்கு உள்ள உரிமைகளை அறிந்தவர்கள் பலர் உள்ளனர். இவர்கள் "அந்த உரிமைகளை பாதுகாக்கின்றார்களா?" என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இதனால் சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோ கங்கள் மலிந்து காணப்படுகின்றன. இவ்வாறான துஷ்பிரயோ கங்களை நீக்க வேண்டுமாயின் சிறுவர்களுக்கு உள்ள உரிமை களை அறிந்து அதைப் பாதுகாக்க வேண்டும். இவ்வாறான சிந்தனைகளை உள்ளடக்கிய இக்கட்டுரையை நான் எழுதுகின்றேன்.

சிறுவர்கள் என்பவர்கள் யார்? என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் சிறுவர்கள் என்று அழைக்கப்படுவர். இவர்களுக்கு உள்ள உரிமைகள் என்ன என்று பார்ப்போமானால் இலங்கை, சிறுவர்களுக்கான உரிமை களைப் பேணுவதில் அக்கறை கொண்டு 1991ஆம் ஆண்டு யூலை மாதம் 12ஆம் திகதி சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தைப் பின்னுறுதிப்படுத்தியதுடன் 1992ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சிறுவர் பட்டயத்தையும் உருவாக்கியது. இச்சிறுவர் பட்டயத்தில் பல உறுதி மொழிகள் கூறப்பட்டன. அவையாவன:

1. 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் சிறுவர்கள்
2. சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அரசின் கடமையாகும்.
3. குழந்தை பிறக்கும் போதே உயிர்வாழும் உரிமையுடனேயே பிறக்கின்றது.
4. குழந்தை பிறந்தவுடன் பதிவு செய்யப்படவும், பெயரைப் பெறவும் தேசிய இனத்தைச் சார்ந்து வாழவும் உரிமை உண்டு.
5. குழந்தை பெற்றோரை அறியவும் அவர்களிடமிருந்து பரா மரிப்பைப் பெறவும் உரிமையைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பிள்ளைக்கு கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் கொடுத்தல் வேண்டும்.
7. பிள்ளைகளை பாதிக்கும் எந்த விடயத்திலும் அதன் கருத்தினை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு சிறுவர்களுக்கான 40 உரிமைகளை இது முன் மொழிந்தது. இவ்வாறான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் சிறுவர்கள் நன்னடத்தை உள்ளவர்களாகவும் சிறந்த தலைவர் களாகவும் உருவாகும் வாய்ப்பு உள்ளதாக சமவாயம் கூறியுள்ளது. சிறுவர் உரிமைகளை மீறுவோர்கள் பல தண்டனைகளுக்கு உள்ளாக நேரிடும் என்றும் சமவாயம் கூறியுள்ளது. அதற்கான சட்டங்களையும் அது முன்வைத்தது.

1. சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டம் 1998ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
2. பராமரிப்புச் சட்டம் 1994ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
3. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2015ஆம் ஆண்டு உருவாக் கப்பட்டது.
4. இளம் பராயப் பெண்கள் தொழிற் சட்டம் 1956ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.
5. இளங் குற்றவாளிகள் கட்டளைச் சட்டம் 1939ஆம் ஆண்டு நடை முறையில் இருந்து வந்தது.

இவ்வாறான சட்டங்களின் முக்கியத்துவம், பின்வந்த காலங் களின் தேவையாக இருந்தமையை அறிய முடிகின்றது. ஆகக் குறைந்த வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதனையும் இலங்கை சமவாயம் முன்வைத்திருந்தது. சிறுவர்களுக்கு உரிமைகளும் அதை மீறு வோருக்குச் சட்டங்களும் தண்டனைகளும் நடைமுறையில் உள்ள போதும் எவரும் அதைக் கருத்தில் கொள்வதில்லை. சிறுவர் உரிமைகளை மீறும் செயற்பாடுகள் இன்றும் சமூகத்தில் நடந்த வண்ணமே உள்ளன.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில்
பிறக்கையிலே...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலைச் சிந்தித்துப் பார்த்தால் குடும்பத்திலேயே தவறுகள் உள்ளதாக நினைக்கத் தோன்றும். ஆனால் சமூகத்தில் பலதரப்பட்ட நிகழ்வுகள் பிள்ளைகளைத் தவறான வழிவகைகளுக்கு இட்டுச் செல்கின்றன.

சிறுவர்களை உடல்ரீதியாகத் துன்புறுத்துதல், அவர்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதி என்பவற்றை வழங்காமல் இருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும். பிள்ளைகளை உரிய முறையில் வழிநடத்தவும், பாதுகாக்கவும் முடியாதவர்களுக்காகவே அனாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் அமைக்கப் பட்டுள்ளன. தமது பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க முடியாத வர்கள் எவராயினும் தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும்.

சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவது வேதனைக் குரிய விடயமாகும். சிறுவர்கள் என்போர் உலகத்தின் நாளைய தலைவர்கள். எதிர்காலச் சிற்பிகள். இவர்களது வாழ்வை சீர்குலைப்பது என்பது சமுதாயத்தின் கெடுதி என்றே கூறவேண்டும். ஒரு பிள்ளைக்கு கல்வி கண் போன்றது. அதைப் பெற்றோர்கள் கொடுக்காமல் மறுப்பது பிள்ளையின் உரிமையை மீறும் செயலாகும். ஐந்தறிவு படைத்த மிருகத்துக்கும், பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவு படைத்த மனிதனுக்கும் வேறுபாடு இல்லாமல் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தும் மனித இனம் இழிவுடையதே.

இன்றைய உலகில் தேவைகள் அதிகரித்து வருகின்றன. அதற் கேற்ப பணமும் தேவைப்படுகின்றது. ஆனால் குடும்பத்தில் தந்தையும், தாயும் தொழிலுக்குச் செல்ல வேண்டிய தேவை கட்டாயம் உள்ளது. இதனால் சிறுவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அன்பும், ஆதரவும் கிடைக்காமல் போகின்றன. இதுவும் சிறுவர் களைப் பாதிப்படைய வழிவகுக்கின்றன. பெற்றோரின் கண்காணிப் பிலும் அரவணைப்பிலும் உள்ள சிறுவர்கள் நல்ல பிரஜைகளாக வருவது சாத்தியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, எதிர்கால உலகின் தலைசிறந்த மனிதர்களாகச் சிறுவர்கள் வளர்வதற்கு சமூகம் அவர்களுக்குச் சகல உரிமை களையும் வழங்க வேண்டும். நடைமுறையில் இதை எல்லோரும் சிந்திப்போமானால் நல்லதொரு நாட்டை உருவாக்க முடியும்.

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்"

**ம. டிசானி**
தரம் - 9

# Penguins

One of the most known flightless birds. Adult emperor penguins have a white stomach, a black head, back tails and wings. They also have yellow - gold markings on the side of their head and neck. They have a distinctive waddling walk owing to their heavy bodies and short legs. On average they measure 115cm in height. The emperor penguins are only found in Antarctica. They mostly feed on fish, squid and krill. The male emperor penguins are in charge of keeping the eggs safe and warm. They do so by balancing the egg on their feet and covering it with its feathered skin. They are very skilled swimmers and divers.

By : **P. Jenoshan**
Grade - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mother

A Mother is one who understand
the things you say and do
Who always overlooks your faults
and sees the best in you
A mother is one whose special love
inspires you day by day
Who fills your heart with gladness
in her warm and thoughtful way
A mother is all these things and more
the greatest treasure known
and the dearest mother in all of the world
is the one I call my own
Could you come back
and stay a while
I want to hear your voice
and see your smile
I want to hold you tight
and never let go
And tell you how much
I love you so
I love you so much mom.

**T. Tharanika**
Grade - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட ரீதியாகப் பரிசு பெறுவோர் விபரம்

**புரவலர் : திரு சி. இராதாகிருஸ்ணன்**
**அமரர். நரசிங்கம் பொன்னுத்துரை (வத்தானைப்புலம், கருகம்பனை) ஞாபகார்த்தமாக**

**தரம் - 1**

1. கு. டிஷாயினி - தமிழ், கணிதம், சமயம், 1ஆம் பரிசு, சுற்றாடல் 2ஆம் பரிசு
2. ச. அஜித்ரா - சுற்றாடல் 1ஆம் பரிசு
3. ச. சதுர்ஷிகன் - சமயம், சுற்றாடல் 3ஆம் பரிசு
4. சே. அக்ஷரா - கணிதம் 3ஆம் பரிசு
5. த. யெஸ்மிதா - தமிழ் 3ஆம் பரிசு

**தரம் - 2**

1. க. டர்சனா - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் 1ஆம் பரிசு
2. மு. மதுரிகா - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் 2ஆம் பரிசு
3. ப. துளசிகா - தமிழ், சமயம், சுற்றாடல் 3ஆம் பரிசு
4. தி. சரணியா - கணிதம் 3ஆம் பரிசு

**புரவலர் - செல்வி ஜெ. தம்பாப்பிள்ளை**
**அமரர் செல்வி நகுலநாயகி ஞாபகார்த்தமாக**

**தரம் - 3**

1. ஜெ. டிலுக்சன் - தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் 1ஆம் பரிசு சமயம் 2ஆம் பரிசு
2. க.ஹரிசனா - சமயம் 1ஆம் பரிசு தமிழ், ஆங்கிலம் 2ஆம் பரிசு
3. சி. சானியா - சமயம் 2ஆம் பரிசு தமிழ், கணிதம், ஆங்கிலம் 3ஆம் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கி. ஷபிஷன் - கணிதம். சுற்றாடல் 2ஆம் பரிசு

5. சி. அபினாஷ் - சமயம் 2ஆம் பரிசு, சுற்றாடல் 3ஆம் பரிசு

**புரவலர் : திருமதி சி. நிர்மலா**
**அமரர் சிவாஜினி ஞாபகார்த்தமாக**

**தரம் - 4**

1. இ. ஆரணி - சமயம், தமிழ் 1ஆம் பரிசு
கணிதம், சுற்றாடல் 2ம் பரிசு,
ஆங்கிலம் 3ஆம் பரிசு

2. ஜெ. ரிஷாத் - சமயம், தமிழ்மொழி 2ஆம் பரிசு
கணிதம் 3ஆம் பரிசு
சுற்றாடல் 1ஆம் பரிசு

3. சி. நர்மதா - கணிதம் 1ஆம் பரிசு
ஆங்கிலம் 2ஆம் பரிசு
சமயம், தமிழ் 3ஆம் பரிசு

4. ப. தேனுஷா - ஆங்கிலம் 1ஆம் பரிசு
சுற்றாடல் 3ஆம் பரிசு

**புரவலர் : திரு. த. வேல்ராஜா, திரு. ஸ்கந்தராஜா சகோதரர்கள்**
**அமரர்கள் திரு. திருமதி நடராஜா - தண்டிகை நினைவாக**

**தரம் - 5**

1. உ. சகீனா - தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் 1ஆம் பரிசு

2. த. தனுசியா - ஆங்கிலம் 1ஆம் பரிசு
தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் 2ஆம் பரிசு

3. க. தர்மிகா - தமிழ், கணிதம், சுற்றாடல் 3ஆம் பரிசு
ஆங்கிலம் 2ஆம் பரிசு
சமயம் 3ஆம் பரிசு

4. இ. மதுசா - ஆங்கிலம் 3ஆம் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புரவலர் : செல்வி சி. சிவமலர்**

அமரர் சாந்தகுணதேவி ஞாபகார்த்தமாக

**தரம் - 6**

1. கெ. யஸ்மினி - ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, கணிதம், புவியியல், நடனம், குடியுரிமைக்கல்வி, செய்ம்முறைத் தொழினுட்பம், சுகாதாரமும் உடற் கல்வியும் 1ஆம் பரிசு
தமிழ் 2ஆம் பரிசு
சமயம் 3ஆம் பரிசு

2. ம. பிரவின் - சமயம், தமிழ் 1ஆம் பரிசு
ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, கணிதம், புவியியல், குடியுரிமைக்கல்வி, செய்ம்முறைத் தொழினுட்பம், சுகசுதாரமும் உடற் கல்வியும் 2ஆம் பரிசு
சித்திரம் மூன்றாம் பரிசு

3. ய. கொலிம்சன் - சங்கீதம் 1ஆம் பரிசு
விஞ்ஞானம், கணிதம், புவியியல் 3ஆம் பரிசு

4. வி. கிரிசாந்தினி - சமயம், சங்கீதம் 2ஆம் பரிசு
தமிழ், ஆங்கிலம், வரலாறு, குடியுரிமைக் கல்வி, செய்ம்முறைத் தொழினுட்பம், சுகாதாரமும் உடற் கல்வியும் 3ஆம் பரிசு

5. தே. லக்ஷிகா - நடனம் 2ஆம் பரிசு
சமயம் 3ஆம் பரிசு

**புரவலர் : திரு. ம. ஜெயக்குமார்**

**அமரர்கள் திரு. திருமதி மகாலிங்கம் சின்னம்மா ஞாபகார்த்தமாக**

**தரம் - 7**

1. அ. பிரியா - சைவசமயம். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு, செய்ம்முறைத் தொழினுட்பம் 1ஆம் பரிசு
தமிழ், குடியுரிமைக்கல்வி, சுகாதாரம், சங்கீதம் 2ஆம் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கி. தஸ்மி - தமிழ், குடியியற்கல்வி, சுகாதாரம், சங்கீதம் 1ஆம் பரிசு
சைவசமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் 2ஆம் பரிசு
ஆங்கிலம், செய்ம்முறைத் தொழினுட்பம் 3ஆம் பரிசு

3. ச. சந்தியா - நடனம் 1ஆம் பரிசு
ஆங்கிலம், செய்ம்முறைத் தொழினுட்பம் 2ஆம் பரிசு
சைவசமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமைக்கல்வி, சுகாதாரம் 3ஆம் பரிசு

4. சி. வசிதரன் - சித்திரம் 1ஆம் பரிசு

5. நி. நிவேதன் - சித்திரம் 2ஆம் பரிசு, வரலாறு 3ஆம் பரிசு

**புரவலர் : திரு. இ. திருச்செல்வம்**

**அமரர்கள் திரு. திருமதி இராமலிங்கம் ஞாபகார்த்தமாக**

**தரம் – 8**

1. நே. கிஷோர் - கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சுகாதாரம், செய்ம்முறைத் தொழினுட்பம், சித்திரம் 1ஆம் பரிசு
சைவநெறி, குடியியல் - 2ஆம் பரிசு
தமிழ் 3ஆம் பரிசு

2. சு. பிரணவி - சைவநெறி, தமிழ், குடியியல், நடனம் 1ஆம் பரிசு
கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சுகாதாரம், செய்ம்முறைத் தொழினுட்பம் 2ஆம் பரிசு

3. வி. பிரித்திகா - சங்கீதம் 1ஆம் பரிசு, தமிழ் 2ஆம் பரிசு
விஞ்ஞானம், வரலாறு, சுகாதாரம், குடியியல் 3ஆம் பரிசு

4. இ. டிலானி - சைவநெறி 2ஆம் பரிசு

5. பு. நித்தியப்பிரியா - சங்கீதம் 2ஆம் பரிசு
கணிதம் 3ஆம் பரிசு

6. வி. ரவிராஜ் - புவியியல், சித்திரம் 3ஆம் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புரவலர் : திரு. உ. ரவீந்திரன்**

**அமரர் க. உமாபதிசிவம் கோகிலா ஞாபகார்த்தமாக**

**தரம் - 9**

1. ஜெ. டிலான்ஷன் - சைவசமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி, சுகாதாரம், செய்ம்முறைத் தொழினுட்பம், சித்திரம், 1ஆம் பரிசு
ஆங்கிலம் 2ஆம் பரிசு

2. நே. லோஜினி - ஆங்கிலம் 1ஆம் பரிசு
சைவசமயம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமைக்கல்வி, சுகாதாரம், செயன்முறைத் தொழிநுட்பம், சங்கீதம் 2ஆம் பரிசு.

3. வி. ஜெனிஸ்வன் - கணிதம், புவியியல் 2ஆம் பரிசு
ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு 3ஆம் பரிசு

4. இ. மதனா - சங்கீதம் 1ஆம் பரிசு
சைவசமயம், தமிழ், குடியுரிமைக்கல்வி, சுகாதாரம், செய்ம்முறைத் தொழினுட்பம் 3ஆம் பரிசு

5. இ. மிதினா - சைவசமயம் 3ஆம் பரிசு

6.ச. காயத்திரி - நடனம் 1ஆம் பரிசு

**புரவலர் : திரு. பா. சசிகரன்**

**அமரர். நரசிங்கம் இராசையா,**

**அமரர் நரசிங்கம் நடராசா (கருகம்பனை) ஞாபகார்த்தமாக**

**தரம் - 10**

1. ஜெ. டிலக்சிகா - சமயம், விஞ்ஞானம், கணிதம், தமிழ், வரலாறு, ஆங்கிலம், குடியுரிமை, சங்கீதம், சுகாதாரம் 1ஆம் பரிசு

2. சு. நியாள்சன் - சித்திரம், விவசாயம் 1ஆம் பரிசு
கணிதம், வரலாறு, குடியுரிமை 2ஆம் பரிசு
சமயம், தமிழ் 3ஆம் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ர. லக்சிகா - சமயம், தமிழ், விவசாயம் 2ஆம் பரிசு
வரலாறு, குடியுரிமை 3ஆம் பரிசு

4. ற. தமிழ்மதி - கிறிஸ்தவம், நடனம் 1ஆம் பரிசு
சுகாதாரம் 2ஆம் பரிசு

5. சி. கலையரசி - கிறிஸ்தவம் 1ஆம் பரிசு
மனைப்பொருளியல் 2ஆம் பரிசு

6. ரூ. தர்சன் - சித்திரம் 2ஆம் பரிசு
சுகாதரரம் 3ஆம் பரிசு

7. தி. சஞ்சீவன் - கணிதம், சித்திரம் 3ஆம் பரிசு

8. கு. மதுசா - ஆங்கிலம் 2ஆம் பரிசு
மனைப்பொருளியல் 3ஆம் பரிசு

9. வ. டக்சிகா - மனைப்பொருளியல் 1ஆம் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பரிசு பெறுவோர்

| மாணவர் பெயர் | தரம் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்டம் | வலயம் | மாகாணம் | வழங்குபவர் |
|---|---|---|---|---|---|---|---|
| பே. காவியன், ற. ஷெண்சியன்<br>சி. அபினாஸ், ஜெ. டிலுக்ஸ்சன்,<br>கி. விபிஷன், சு. கபிலன்,<br>பு. நிதுர்ஷா, ச. கனிஸ்ரா,<br>ச. கரிஷனா, சி. ஷானியா,<br>ச. ஒஸ்ரினா. வி. கீர்த்திகா | 3 | செயற்பட்டு மகிழ்வோம் | 1 | 1 | 3 | | புரவலர் : திரு. க. தயாபரநாதன்<br>அமரர் வை. கந்தையா<br>ஞாபகார்த்தமாக |
| அ. தனுசியா, அ. சஜித்தனா,<br>ஜெ. மதுசா, இ. மதுசா,<br>ச. டிலன்சிகா, க. தர்மிகா,<br>த. அபிநயா, சா. நிலக்ஷன்,<br>ச. ஸஸ்மிதன், தே. ஜேந்தன்,<br>ம. நிரூபன், வி. ராகுல்ராஜ்,<br>ம. பிரவீசன், ர. தமிழாகரன்,<br>ந. யாழவன், அ. நிதர்ஷன் | 5 | செயற்பட்டு மகிழ்வோம் | 2 | | | | புரவலர் : பா. பாலமுரளி<br>அமரர் பரமேஸ்வரி பார்வதிநாதசிவம்<br>ஞாபகார்த்தமாக |
| ரூ. மதுசன் | 5 | சித்திரம் | 2 | | | | புரவலர் : திரு. ச. சோமசுந்தரம்<br>திரு. திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை<br>ஞாபகார்த்தமாக |
| இ. வாசனாதிலக்சி | 2 | சித்திரம் | 3 | | | | புரவலர் : திரு. ச. சோமசுந்தரம்<br>திரு. திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை<br>ஞாபகார்த்தமாக |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாணவர் பெயர் | தரம் | போட்டி விபரம் | குழும மட்டம் | கோட்டம் | வலயம் | மாகாணம் | வழங்குபவர் |
|---|---|---|---|---|---|---|---|
| தி. சரணியா | 3 | சித்திரம் | 3 | | | | புரவலர் : வ. இராமச்சந்திரன்<br>செல்வன் சிவவரதன் ஞாபகார்த்தமாக |
| சி. அபிநாஸ் | 4 | சித்திரம் | 2 | | | | புரவலர் : க. அருள்லிங்கம்<br>அமரர் இராசபூபதி ஞாபகார்த்தமாக |
| பு. நிதுர்ஷா | 4 | இசையும் அசையும் | | 2 | | | புரவலர் : ச. ஜெயதாசன்<br>அமரர் ஆரணி ஞாபகார்த்தமாக |
| ஜெ. டிலக்ஷிகா, ர. லக்ஷிகா, சு. சுமேதினி, ச. காயத்திரி, ம. லக்சனா, சு. சுபாசினி, ற. குவேனி, தே. தர்சிகா, வ. டக்சிகா, சு. நிலுஜா, பா. தாரணி, ப. பிதேனியா, ற. தமிழ்மதி, ம. கீர்த்தனா, வி. விஜிந்தினி, ஜெ. றஜித்தா, சி. தியானுயா | | உதைபந்தாட்டம் | | | | 4 | புரவலர் : திரு. சி. நகுலாசலபதி<br>அமரர் வயிரவப்பிள்ளை சின்னத்தம்பி<br>அமரர் சின்னத்தம்பி செல்லம்<br>ஞாபகார்த்தமாக<br>புரவலர் : திரு. க. மகேந்திரன்<br>அமரர் கனகசபை ஞாபகார்த்தமாக |
| உ. சகீனா 131<br>அ. தனுசியா 123<br>க. தர்மிகா 105 | | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் | | | | | புரவலர் : திருமதி இ. பற்குணராஜா<br>திரு. திருமதி விநாயகர் இலட்சுமிப்பிள்ளை<br>ஞாபகார்த்தமாக |
| சு. நிலுஜா 4C 4S<br>சு. சுபாசினி 6C 2S | | க.பொ.த (சா/த) 2017 சித்தி<br>க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கில பாட சித்தி | | | | | புரவலர் : திருமதி தனபாக்கியம் இராமசாமி<br>அமரர் இராமசாமி ஞாபகார்த்தமாக<br>புரவலர் : திருமதி பிறேமா இதயகுமார் (ஜேர்மனி)<br>அமரர் காசிப்பிள்ளை சரவணமுத்து<br>(முன்னாள் ஆங்கில ஆசிரியர்) ஞாபகார்த்தமாக |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்
## அன்பளிப்புச் செய்தோர் விபரம் - 2017 (இதழ் 6இன் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 01. | திரு. ம. ஜெயக்குமார் | 5000.00 |
| 02. | திரு. ந. உமாபதீஸ்வரக்குருக்கள் | 3000.00 |
| 03. | செல்வி சி. சிவமலர் | 3000.00 |
| 04. | திரு. இ. திருச்செல்வம் | 2000.00 |
| 05. | திருமதி ச. பாலசுப்பிரமணியம் | 500.00 |

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்
## அன்பளிப்புச் செய்தோர் விபரம் - 2018

| | | |
|---|---|---|
| 01. | திரு. உ. பரராசசேகரன் | 30000.00 |
| 02. | திரு. க. தயாபரநாதன் | 20000.00 |
| 03. | திருமதி தனபாக்கியம் இராமசாமி | 20000.00 |
| 04. | திரு. உ. ரவீந்திரன் | 10000.00 |
| 05. | திரு. சி. இராதாகிருஷ்ணன் | 10000.00 |
| 06. | திரு. சி. நகுலாசலபதி | 10000.00 |
| 07. | திரு. பா. சசிகரன் | 10000.00 |
| 08. | திரு. ம. ஜெயக்குமார் | 5000.00 |
| 09. | திரு. த. வேல்ராஜா | 5000.00 |
| 10. | திரு. க. மகேந்திரன் | 5000.00 |
| 11. | திருமதி இ. பற்குணராஜா | 3000.00 |
| 12. | திருமதி சி. நிர்மலா | 3000.00 |
| 13. | செல்வி சி. சிவமலர் | 3000.00 |
| 14. | செல்வி ஜெ. தம்பாப்பிள்ளை | 2000.00 |
| 15. | திரு. இ. திருச்செல்வம் | 2000.00 |
| 16. | திருமதி பு. பாலசுப்பிரமணியம் | 2000.00 |
| 17. | திரு. ச. ஜெயதாசன் | 2000.00 |
| 18. | திரு. க. அருள்லிங்கம் | 1000.00 |
| 19. | திருமதி வ. இராமச்சந்திரன் | 1000.00 |
| 20. | திரு. பா. பாலமுரளி | 1000.00 |
| 21. | திருமதி ச. சோமசுந்தரம் | 2000.00 |
| 22. | திருமதி பிறேமா இதயகுமார் | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org